விடுதலைப்புலிகள்

குரல் – 121 | மார்கழி, 2004 – தை,2005 | ஐரோப்பியப் பதிப்பு

● சுனாமியின் அரசியல்... 03
● இனவாத அரசியலை... 05
● சுனாமிக்குப் பின் இன்னொரு... 06
● உலக சோகமாக... 07
● மிஞ்சியவர்கள் சொல்கின்ற... 13
● நெருப்பு நினைவுகளுடன்... 12

# சமாதானத்தைக் குழப்பியடிக்கும் படுகொலை முயற்சிகள்

**மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் எதிரியின் துப்பாக்கித் தாக்குதலுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டுள்ளனர்.**

**மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான புனானைப்பகுதியில் வைத்து கௌசல்யன் குழுவினர் பயணித்த வாகனம்மீது நடாத்தப்பட்ட தாக்குதலிலேயே அவர்கள் கொல்லப்பட்டனர். லெப்.கேணல் கௌசல்யனுடன் மேஜர் புகழன், மேஜர் செந்தமிழன், 2ம் லெப் விதிமாறன் ஆகியோரும் சாவடைந்துள்ளனர். இவர்களுக்குப் புலிகள் இயக்கம் வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர்.**

அந்தவேளையில், அவர்களுடன் கூடப் பயணித்த அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் - மனித உரிமைவாதியுமான மாமனிதர் திரு.அரியநாயகம் சந்திரநேருவும் பலியாகியுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பாக தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசனை செய்வதற்காக லெப்.கேணல் கௌசல்யன் குழுவினர் கிளிநொச்சி வந்திருந்தனர்.

சந்திப்புகளை நடாத்திவிட்டு மட்டக்களப்புக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோதே அவர்கள் மீது கொலைத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.


கௌசல்யன் குழுவினரின் பயணம் இராணுவத்தின் அனுமதியுடனேயே நடந்தது. ஓமந்தை சோதனைச் சாவடியூடாகத் தங்களை யார் என்று இனங்காட்டி - பதிவுசெய்து கொண்டு

(தொடர்ச்சி 15ஆம் பக்கத்தில்)



தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன் மட்டு–அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன்.

# இயற்கை அழிவிலும் இனவாதச் சிந்தனை




**தமிழ் - சிங்கள, முஸ்லிம் என்ற வேறுபாடின்றி கரையோரங்களில் வசித்த அனைவரையும் கடற்கோள் தாக்கி அழித்தபோது மக்கள் இன உணர்வு கடந்து - மனிதாபிமானத்துடன் செயற்பட்டார்கள்.**

**தமிழ் இளைஞர்கள் முஸ்லிம் மக்களைக் காப்பாற்றி கரைசேர்ப்பித்ததும் - முஸ்லிம் மக்கள் தமிழ்மக்களைப் பாதுகாத்து புகலிடம் வழங்கியதையும் - சிங்கள மக்கள் தமிழர்களுக்கு உணவுப்பொதிகள் கொடுத்து உதவியதும்... என்று அந்தச் சிலநாட்கள் தீவின் இன அரசியலுக்கு முரணாகவே கழிந்தன.**

**இந்த இயற்கை அனர்த்தம் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மனநிலையிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டுவரும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்த்தனர்.**

'சுனாமி' அழிவுக்கான புனருத்தான வேலைகளையும் - சமாதான முயற்சிகளையும் ஒன்றாக முன்னெடுத்து வெற்றிகாண முடியும் என்றும் சர்வதேச இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டனர்.

சுனாமி அழிவுகளைப் பார்வையிடுவதுடன், சமாதான முயற்சிகளையும் வலுப்படுத்தும் எண்ணத்துடன் மேற்குநாடுகளின் தலைவர்கள் இலங்கை நோக்கி அரசியற் பயணங்கள் மேற்கொண்டனர்.

எனினும், அனைத்துத் தரப்பினரும் நம்பியதுபோல அரசியல்நகர, சந்திரிகா அம்மையார் இடங்கொடுக்கவில்லை.

இயற்கை அழிவைச் சமாதான முயற்சிகளுடன் எல்லோரும் இணைத்துப் பார்த்து சிந்தித்துக் கொண்டிருக்க, அம்மையாரோ இனவாத ரீதியிலும் - போர் முனைப்பிலும் செயற்பட ஆரம்பித்தார். உடனடி மீட்பு நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் திறம்பட நடாத்திவருகின்றது என்பதை அறிந்திருந்தும் புலிகள்மீது சேறுபூசும் வகையில் குற்றச்சாட்டுக்களை வீசிவந்தார்.

உலகநாடுகள் உவந்தளித்த நிவாரண உதவிகளை சிங்களவர் - தமிழர் என்று இனபேதம் காட்டி விநியோகிக்க ஏற்பாடுகள் செய்தார்.

கிழக்கு மாகாணத் தமிழ்மக்களுக்கெனச் சென்ற நிவாரணப் பொருட்களை படையினரும் - ஜே.வி.பியினரும் வழிமறித்து சிங்களவர்களுக்கெனத் திசைதிருப்பியபோது அம்மையாரின் அரசு அவற்றை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்ததுடன் - அவ்வாறான சம்பவங்கள் நடைபெறவில்லை என்று நியாயப்படுத்தல்களிலும் ஈடுபட்டது.

இயற்கையின் சீற்றத்தில் இறந்தவர்களில் மூன்றில் இரண்டுபங்கு மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்தபோது நிவாரண உதவிகளின் அதிகரித்த பங்கை தெற்கிற்கு அனுப்புவதிலேயே அம்மையார் குறியாக இருந்தார். தெற்கிலும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்களவருக்கே உதவிகள் அளவுக்கு அதிகமாக வழங்கப்பட்டன.

புனர்நிர்மாணத்திற்கான திட்டங்களை வெளிநாட்டு அரசுகள் கோரியபோது தமிழர் பகுதிகளை முழுமையாகப் புறக்கணித்துவிட்டு சிங்களவர் பகுதிகளுக்கான திட்டங்களை உடனடியாகத் தயாரித்து, சந்திரிகா அரசு அனுப்பிவைத்தது. இலங்கை ஒருநாடு என்று இறைமைத் தத்துவம்

(தொடர்ச்சி 15ஆம் பக்கத்தில்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# கடற்கோள்

புலிகளின்குரல்

வரலாற்றில் எப்போதாவது நடைபெறும் ஒரு சம்பவம் ஒரு தேசிய இனத்தை முழுமையான சோகத்தில் ஆழ்த்திவிடுவதுண்டு.

தமிழீழ மக்களைப் பொறுத்தளவில் இத்தகைய பல தேசியத் துயர்களை எமது விடுதலைப்போராட்ட காலத்தில் அவர்கள் சந்தித்திருந்தார்கள்.

இத் துயர்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல கடற்கோள் ஏற்படுத்திய அழிவுகள் மாபெரும் தேசியத் துயராக வரலாற்றில் பதியப்பட்டுவிட்டது.

தமிழீழக் கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதிக் கடற்கரை கடற்கோளால் துவம்சம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு சிலநிமிட நேரத்தில் அழிந்த பல்லாயிரம் உயிர்களும் கடல் அலைகளின் நம்பமுடியாச் சீற்றமும் தமிழீழ மக்களை உலுப்பியெடுத்துவிட்டது.

பண்டைய தமிழ் நூல்களில் பதிவாகியிருந்த கடற்கோள் என்ற சொல், எந்தவித அனுபவ அர்த்தமும் இல்லாத கற்பனைச்சொல் போன்றே, கடந்த பல நூற்றாண்டுகளாகத் தமிழரின் மனதில் இருந்துவந்தது.

26.12.2004 அன்று காலைவேளையில் கரையோரக் கிராமங்களை, பட்டணங்களை விழுங்கிய கடல்நீர், கடற்கோளின் அர்த்த பரிமாணத்தை தமிழ்மக்களுக்குக் காட்டிச் சென்றது.

கரையில்வந்து கால் நனைத்துச் செல்லும் கடல்நீர் திடீரெனப் பனையளவு உயரம் எழும்பிக் கரைகளைச் கபளீகரம் செய்த காட்சி ஒரு அழிவுகரமாகவே காணப்பட்டது.

அழிவையும் - அச்சத்தையும் ஒருங்கே வெளிப்படுத்தும் ‘சுனாமி’ என்ற ஒரு சொல்லையும் தமிழ் அகராதிக்குள் கடற்கோள் திணித்துவிட்டுச் சென்றுள்ளது.

தலைவர் பிரபாகரன் கூறியதுபோல இது எமது மக்கள் சந்தித்த இரண்டாவது சுனாமி ஆகும். ‘ஆமி ஏற்படுத்திய சுனாமி’ என்று சிங்களப்படையின் இன அழிப்பை தலைவர் உவமானப்படுத்தியிருந்தார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் தழிழீழக்கடல் வகித்துவரும் பங்கு - பாத்திரம் முக்கியமானது. அதுபோலவே, கரையோர மக்களின் போராட்டப் பங்களிப்பும் காத்திரமானது.

ஒருபுறம் இயற்கை ஆபத்தையும் - மறுபுறம் சிங்களக் கடற்படையின் கொலைவெறி ஆபாயத்தையும் எதிர்கொண்டு அன்றாட வாழ்க்கை நடத்திய இம்மக்கள் கடற்கோள் என்ற பேரனர்த்தத்தையும் எதிர்கொண்டது பெரும் துயரத்தைத் தருகின்றது.

இத் துயரத்தின் சோகவடுக்கள் அம்மக்களை இன்னும் பல வருடங்களுக்கு வாட்டத்தான் போகின்றது.

கடலுக்கு பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோரின் துயரும், பெற்றோரைப் பறிகொடுத்த பிள்ளைகளின் சோகமும், வாழ்க்கைத் துணையை இழந்தவர்களின் கவலைகளும் தமிழ் இனத்தின் குடும்பச்சோகமாகவே உணரப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் இந்த இயற்கையின் சீற்றத்தைக் கேள்வியுற்று துடிதுடித்துப் போனதையும் - தாயகத்து உறவுகளுக்கு வாரிவழங்கி உதவிகள் புரிந்ததையும், அவர்களுக்காகக் கண்ணீர் வடித்தழுததும் இந்தத் தேசிய சோகத்திற்குச் சாட்சிகளாக உள்ளன.

வரலாற்றில் நாம் சந்தித்திராத ஒரு பேரழிவை கடல் தந்திருந்தாலும் அது எங்களது எதிரியல்ல. மாறாக, அது எங்களது தேசியச் சொத்து.

இயற்கையை அனுசரித்து அதை வசப்படுத்துவதில்தான் மனிதரின் வெற்றி தங்கியுள்ளது. அறிவியலின் வழிகாட்டலுடன் பெற்ற அனுபவங்களையும் துணையாகக்கொண்டு, எதிர்காலத்தில், இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்வோம் ●

# அரியநாயகம் சந்திரநேரு அவர்களுக்கு மாமனிதர் கௌரவம்

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

09.02.2005.



தமிழ் மக்களின் விடிவையும் தமிழீழ மண்ணின் விடுதலையையும் தனது வாழ்வின் அதியுன்னத இலட்சியமாக வரித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காக அயராது உழைத்த உன்னத மனிதரை தமிழர் தேசம் இன்று இழந்துவிட்டது. தமிழ்மக்களது உரிமைக்காகவும் நீதிக்காகவும் ஓயாத ஒலித்த ஒரு பெரும் குரல் இன்று அடங்கிவிட்டது. பகைவனின் மிருகத்தனமான தாக்குதலுக்கு ஒரு தமிழினப் பற்றாளர் பலியாகிவிட்டார்.

திரு. அரியநாயகம் சந்திரநேரு அவர்கள் தன்னலம் அகன்ற மனிதநேயம் மிக்க ஒரு பொதுநலவாதி. தமிழீழ மண் தந்த தலைசிறந்த ஒரு மனித உரிமை ஆர்வலர். புரட்சிகரமான ஒரு அரசியல்வாதி. அனைவரது உள்ளங்களையும் கவர்ந்துகொண்ட ஒரு உயரிய பண்பாளர். இவரது சாவு தமிழர் தேசத்திற்கு ஒரு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அம்பாறை மண்ணோடும் அந்த மண்ணின் மக்களோடும் ஒன்றியதாகவே அவரது வாழ்விருந்தது. சிங்களப் படைகளின் தமிழின அழிப்புப்போர் உச்சம் பெற்றிருந்த நாட்களிலும் போர் ஓய்வு நிலவுகின்ற இன்றைய நாட்களிலும் அந்த மண்ணோடும் அந்த மக்களோடும் இணைந்துநின்று, அனைத்துக்கும் முகம் கொடுத்தார். சிங்களப் படைகள் அம்பாறை மண்ணில் புரிந்த அழிவுகளையும் அட்டூழியங்களையும் நெஞ்சுறுதியுடனும் நேர்மைத்திறனுடனும் உலகிற்கு வெளிக்கொணர்ந்தார். சிங்களப் படைகளின் இடைவிடாத அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சுடனும் அபாரமான துணிச்சலுடனும் அநீதியை எதிர்த்துப் போரிட்டார். வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவனர்களில் ஒருவராக இருந்து, தமிழ்மக்களது உரிமைகளுக்காக ஓயாது உழைத்தார். தமிழ்மக்களது போராட்ட நியாயங்களையும் நியாயப்பாடுகளையும் தெட்டத்தெளிவாக உலக அரங்குகளில் எடுத்துக்கூறினார். இவரது அரும்பணி என்றும் பாராட்டிற்குரியது.

திரு. அரியநாயகம் சந்திரநேரு அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக “மாமனிதர்” என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

வே.பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.



www.eelamview.com

# "சுனாமியின் அரசியல் மீதான அதிரடித் தாக்குதல்"

– க.வே.பாலகுமாரன் –

இயற்கையன்னையின் வலுவும் சீற்றமும் எத்தகையதென்பது இன்னொருமுறை உணர்த்தப்பட்டு விட்டது. மனிதர் அறிந்தது எவ்வளவு? அறியாதது எவ்வளவு? அல்லது அறியவேண்டியது எவ்வளவென்பதும் உணர்த்தப்பட்டாகி விட்டது. "எமனாய் வந்த கடலை எதிர்கொண்டபிறகு எவனைப் புகழ்வது கருணைக் கடலென்று" என்று மனிதரின் இழப்பின் வலியும் இயலாமையும் கடலன்னை மீதான கடும் சீற்றமாக பல்லாயிரக்கணக்கான கவிதை, கட்டுரைகளில் வடித்தாகி விட்டது. எனினும் இறுதியில் கடலன்னை மடிமீதே வருவோம் மீண்டும் எழுவோம் என உண்மையும் உரைத்தாகிவிட்டது.

இத்தகையதொரு சூழலிலேதான் இயற்கையன்னையின் முன்னே நாம் எளியவர்கள், சமமானவர்கள் எனவே இவ்வனர்த்தத்திற்கு வேறுபாடுகளை புறம் தள்ளிவிட்டு இணைந்து பணிசெய்வோம் என வேண்டுகை விடுக்கப்பட்டுள்ள நிலையில் சிங்களத்தரப்பு செய்வதென்ன? சருவதேச உதவிகளை தடங்கலின்றிப் பெறுவதற்காக தொடக்கத்தில் ஒத்துழைப்புக் குரலெழுப்பிய அம்மையார் இப்போது என்ன செய்கின்றார்? எப்போதும் போலவே சிங்களப் பேரினவாதத்தின் **இரு மாறா நிலைப்பாடுகளை எமது இணக்கக்குரலை பலவீனமாகக் கருதுவதும் தமக்கு எத்தகைய அழிவு நிலையேற்பட்டாலும் எவ்வழிகளைப் பயன்படுத்தியாவது தமிழ்மக்களைப் புறம் தள்ளுவதுமே தமது முதன்மை முன்னுரிமைச் செயற்பாடென்பதை** அவர் உணர்த்திய வண்ணமேயுள்ளார். போரால் அழிந்த பொருண்மியத்தை கட்டியெழுப்ப சுனாமி நிதியுதவிகளைப் பயன்படுத்தவும் சுனாமிக்குதவ வந்த படைகளை பாதுகாப்பற்ற நாட்டின் பாதுகாப்பினை பாதுகாக்கப் பயன்படுத்தவும், அவர் முனைகிறார். சண்டே ஐலண்டின் 16/01ம் திகதிய முற்பக்கச் செய்தி இவ்வாறுள்ளது. "திருமலை கடற்படையைக் கட்டியெழுப்ப இந்தியக் கடற்படை உதவி. திருமலை மாவட்டத்தின் ஏறத்தாழ 42 கிலோமீற்றர் தூரத்திற்கு துடைத்தழிக்கப்பட்ட கடற்படைத் தளங்களை சீரமைக்க இந்தியக் கடற்படை உதவுகின்றது. குறிப்பாக நிலாவெளியில் சிறிலங்கா கடற்படையின் தலைமையகத்தினைக் கட்டியெழுப்ப இந்தியப்படை உதவிவகின்றது. இந்தியக் கடற்படை பெருமளவு பொருட்களை இதற்காக வழங்கி வருகின்றது." ரோம் பற்றியெரியும்போது நீரோ மன்னன் இசைக்கருவி வாசித்த கதைதானிது. சிறிலங்காவின் நிதியமைச்சர் மகிழ்ச்சியோடு பின்வருமாறு கூறினார். " பெருமளவிலான ரூபாயின் பெறுமதி தளம்பலின்றி உறுதியாகவுள்ளது. எனவே பொருட்களின் விலைகள் விரைவில் குறையும்" நிதியமைச்சரொருவருக்கு இதைவிட மகிழ்ச்சியான செய்தி எதுவிருக்க முடியும்? இதற்கு என்ன காரணம்?

சுனாமியின் பேரழிவை தொலைக்காட்சிகளில் கண்ணுற்ற மேற்குலகம் கதிகலங்கி கண்ணீர் விட்டதன் விளைவாக பெருமளவு நிதியுதவிகளை வாரிவழங்க முன்வந்தது. அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டும் அலைபாய்ந்து கொண்டிருந்துமிருந்த அம்மையாரின் குறுக்கு மூளை விபரீதமாக வேலை செய்தது. முதல்வேலையாக புலிகளை நோக்கி நேசக்கரம் நீட்டுவதாகப் பாவனை செய்தார், தனக்கு மிக நெருங்கியோரை நியமித்து மூன்று புனர்வாழ்வு புனரமைப்புக் குழுக்களை உருவாக்கி வேகமாக சுனாமியின் அழிவிற்கு முகம் கொடுக்க ஆயத்தமாவதாகக் காட்டிக் கொண்டார். மக்கள் கருத்தினை கணக்கெடுக்காமலும், கிடைத்த விபரங்கள் பூரணமாகாத நிலையிலும்



மதிப்பீட்டறிக்கையை வெளியிட்டும், அம்பாந்தோட்டையில் அடிக்கல் நாட்டியும் தன்னையொரு திறமையான வேகமான நிருவாகியாக உலகின் முன் காட்ட அவர் படும்பாடு சொல்லத் தரமன்று.

இப்போது சிறிலங்காவிற்குதவ முன்வரும் நாடுகளினதும் சருவதேச நிதி நிறுவனங்களினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் கையில் 1500 மில்லியன் டொலர் (1.5பில்லியன் டொலர்) பணத்திற்கான கோரிக்கையுள்ளது. இப்போது அடுத்த கோரிக்கை 3.5பில்லியன் டொலருக்கானது வெளியிடப்பட்டு விட்டது. சுனாமியால் அழிவுற்ற கரையோரப்பகுதியை அபிவிருத்திக்கான பகுதியாக பிரகடனப்படுத்தி இப்பகுதியின் புனர்வாழ்வு, புனரமைப்பிற்கான திட்டங்களை 13 துறைகளில் முறையாக மேற்கொள்ள தாம் ஆயத்தமென உதவி கோரும் அறிக்கை உரைக்கின்றது. இத்தனை வேகமாக சிறிலங்கா அரசு இயங்கியதற்கான காரணமென்ன? 2004ஆம் ஆண்டு முடிவில் சிறிலங்காவின் சென்மதி நிலுவை குறிப்பாக எரிபொருள் இறக்குமதியின் மேலதிக செலவின் காரணத்தால் மிகப் பாதகமான நிலையிலிருந்த வெளிநாட்டு சொத்தொதுக்கின் பெறுமதி 2.3 பில்லியன் டொலரிலிருந்து 1.7பில்லியன் டொலராக குறைந்தது. வெளிநாட்டுக் கடன் 9பில்லியன் டொலருக்கான பெருமளவு கடன் தவணைப்பணம் செலுத்தவேண்டியிருந்தது. இவ்வாறாக மூச்சுவிட முடியாத நிலையிலிருந்த அம்மையாருக்கு இப்போது மூச்சுவிட நேரம் கிடைத்துள்ளது. முப்பதுனாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மூச்சையிழந்ததால் இது நேர்ந்தது. ஏனெனில் கடன் தவணைப்பணம் செலுத்தவேண்டிய காலவெல்லை காலம் குறிக்காமல் நீட்டப்பட்டுள்ளது. இக்கட்டுரை எழுதப்படும் வேளையிலே இலங்கையின் இனச் சிக்கலின் தீர்வினைக் காண தலைப்பட்டிருக்கும் இணைத் தலைமை நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம், யப்பான், அமெரிக்கா, நோர்வே போன்றவை பிரசல்ஸ்சில் கூடி உதவி வழங்குவது பற்றி முடிவெடுக்கின்றன. உலகின் செல்வந்த G7நாடுகள் வரும் பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் கூடி சுனாமியால் பாதிப்புற்ற நாடுகளுக்கு உதவுவது பற்றி முடிவெடுக்கப்போகின்றன. இதுவரை நிதியுதவி வழங்கப்போவதாகக் கூறப்பட்ட வாக்குறுதிகளின் தொகை ஏறத்தாழ 1.5பில்லியன் டொலராகவுள்ளது. இவற்றினை உலகவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி, யப்பான், சருவதேச நாணய நிறுவனம் போன்றவற்றின் வாக்குறுதிகள், இவற்றினைவிடவும் இருதரப்பு உதவிகளெனப்படும் தனித்தனி நாடுகள் உதவிகள், தொடர்பாகவும் பெருத்த நம்பிக்கையோடு சிறிலங்காவுள்ளது.

இக்கட்டத்திலேதான் தமிழ்மக்கள் சருவதேசம் நோக்கி விடுதலைப்புலிகளின் வழி **தட்டிக் கழிக்க முடியாத, தார்மீக நியாயங்கள் நிரம்பிய பாரிய வினாவொன்றினை எழுப்புகின்றார்கள்.** உலகின் மனச்சாட்சியினை உலுக்கும் வண்ணம் **மரபு சாராத முடிவொன்றினை** உலகம் எடுக்க தூண்டலாக இவ்வினாவமைகின்றது. சுனாமியால் தமிழர் தாயகத்திலேற்பட்ட அழிவினையே தக்கமுறையில் வெளிப்படுத்த விரும்பாத, புனர்வாழ்வு புனரமைப்பு திட்டங்களில் உரிய இடம் கொடுக்காத ஒரு பெரும்பான்மையின பாராபட்சமான அரசாங்கத்திற்கு எந்த அடிப்படையில் உலகம் உதவப்போகின்றது? சருவதேச சமூகத்தின் ஒருங்கமைப்பின் முன்னே புலிகள் சவால் ஒன்றினை எழுப்பியுள்ளார்கள். இராணுவ களத்தில் ஆயுதங்கள் வழி உயிர் விலைகொடுத்துப் போராடி தடைகள் தாண்டி புலிகள் முன்னேறியபோது சருவதேச தலையீடு நேர்ந்தது. அதனை அரசியல் களத்தில் அமைதி, பேச்சுவார்த்தை ஆயுதங்கள் வழி அறிவுத்திறனைப் பயன்படுத்தி தடைகள் தாண்ட முற்பட்ட போதே சுனாமிப் பேரழிவு நேர்ந்தது. தேசியத் தலைவர் குறிப்பிட்டது போல முதலாவது சுனாமியான சிங்கள அரசின் அடக்குமுறையினை தகர்க்கும் வேளையில் இரண்டாவதான இயற்கைச் சுனாமிக்கு எவ்விதம் முகம் கொடுப்பது? **இரண்டாவது சுனாமிக்கு முகம் கொடுக்கும் அதேவேளையில் விடுதலைப் போராட்ட செல்நெறிக்கு பாதகமில்லாமல் அதனை எவ்வாறு கையாள்வது?**

இதற்கான வழியையும் வழமைபோலவே **தேசியத்தலைவர் தன் இயற்கையறிவால் இயல்பாகவே கண்டறிந்தார்.** இப் புதிய வழிமுறைகளை புலிகள் கையாள்வதால் ஏற்பட்ட உடனடி விளைவுகளை இப்போது உலகம் உன்னிப்பாக அவதானிக்கின்றது. தமிழர் தாயகத்தில் என்ன நடக்கின்றது என்பதை இன்று எவரும் கண்கூடாகவே காணமுடியும். சுனாமிப் பேரழிவோடு இராணுவத்தினால் ஏற்பட்ட பேரழிவை கூடவே காண முடியும். எந்தெந்தச் சொற்களைப் பயன்படுத்தி விடுதலைப் போராட்டத்தினை பலமிழக்கச் செய்ய உலகம் முயன்றதோ அதே சொற்களையே புலிகள் வெளிப்படையாகவே பயன்படுத்துகின்றனர். வெறும் சொற்கள் என்றில்லாமல் கருத்தளவிலும் வெளிப்படைத் தன்மை (Transparancy), வகை கூறும் தன்மை (Accountablity), பேண்தகு வளர்ச்சி (Sustainable development), வலுப்படுத்தல் (Empowerment) மதிப்பிடும் கண்காணிப்பும் என நீளும் இன்றைய உலகின் கருத்தமைவிலும் புலிகள் உட்புகுந்துள்ளனர்.

இது சிங்களம் சற்றும் எதிர்பார்க்காத நிலைப்பாடு. சுனாமியால் வட-கிழக்கிலேற்பட்ட பேரழிவை உலகின் கண்களிலிருந்து மறைக்க சிங்களம் எடுத்த முயற்சி இதனால் பயனளிக்காமல் போய்விட்டது. அரசாங்கத்தால் திரட்டப்பட்ட புள்ளி விபரங்களையே புலிகள் ஆதாரமாக பயன்படுத்தியும் அதேவேளை சிங்களத்திலேற்பட்ட அழிவுகளை குறைத்து மதிப்பிடாமலும் அதேவேளை வட-கிழக்கிலேற்பட்ட பேரழிவுகளை உலகின்முன் வைத்தும் புலிகள் உடனடி நியாயம் கோருகின்றனர். உழுத்துப்போன சிங்கள அரசின் நம்பகத்தன்மையற்ற நிர்வாக இயந்திரம் தயாரிக்கும் வெறும் புள்ளி விபரங்களைக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கப்படமுடியாதவை. அதற்குப் பதிலாக ஆக்கபூர்வமான

01. அறிவியல் வழியிலமைந்த,
02. மக்களை வலுப்படுத்தக் கூடிய,
03. சூழல் பேண் தகைமையிலான,
04. வெளிப்படைத் தன்மையிலான,
05. வகை கூறும் தன்மையுள்ள,

மேம்பாட்டுத் திட்டமொன்றை உலகின்முன் வைக்க அவர்கள் ஆயத்தமாகின்றனர். இதனை தமிழர் தாயகத்தில் நிறைவேற்ற ஒரு பொறிமுறையை புலிகள் வேண்டி நிற்கின்றனர். தொடரும் தமது இராசதந்திரப்போரின் தொடர்ச்சியாக இதனையும் இணைத்துள்ளனர். இலகுபடுத்தப்பட்ட செயற்திறன் வாய்ந்த இவ்வமைப்பினை உலகம் எவ்விதம் மறுக்கமுடியும்? அவ்விதம் மறுத்தால் அதன் விளைவென்ன? தென்னாசியப் பிராந்தியத்திலே மிக மோசமான பாதிப்புக்குள்ளான தமிழர் தாயகத்தில் இலங்கையின் 1900கிலோமீற்றர் நீளமான கடற்கரையின் 1000கிலோமீற்றர் உள்ளது. இக்கடற்கரையின் 800கிலோ மீற்றர் பாதிப்பினை உலகம் எவ்விதம் கவனத்தில் கொள்ளாது விடமுடியும்? இலங்கையின் மொத்த அழிவின் 2/3 பகுதியை தமிழர் தாயகமே தாங்கியுள்ளது என்பதை உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதியான பீற்றர் கலோல்ட் (சண்டே ஐலண்ட் 16.01.05) ஏற்றுள்ளார். ஆகவே எம் மக்கள் கேட்கின்றார்கள், **"உலகே என்ன செய்யப்போகின்றாய்?"**

இவ்விடத்தில்தான் புலிகள் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிலைப்பாடுகளை முன்வைக்கின்றனர். சுனாமியால் தாக்கப்பட்ட எம்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

**இக்கட்டத்திலேதான் தமிழ்மக்கள் சருவதேசம் நோக்கி விடுதலைப்புலிகளின் வழி தட்டிக்கழிக்க முடியாத, தார்மீக நியாயங்கள் நிரம்பிய பாரிய வினாவொன்றினை எழுப்புகிறார்கள். உலகின் மனச்சாட்சியினை உலுக்கும் வண்ணம் மரபு சாராத முடிவொன்றினை உலகம் எடுக்க தூண்டலாக இவ்வினாவமைகிறது. சுனாமியால் தமிழர் தாயகத்திலேற்பட்ட அழிவினையே தக்கமுறையில் வெளிப்படுத்த விரும்பாத புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்களில் உரிய இடம் கொடுக்காத ஒரு பெரும்பான்மையின பாரபட்சமான அரசாங்கத்திற்கு எந்த அடிப்படையில் உலகம் உதவப்போகின்றது?**

# சுனாமி நிவாரணம்:
# வடக்கு கிழக்கில் என்ன நடக்கிறது?



ஸ்ரீலங்கா தேசத்தைப் பொறுத்தவரையில் தமிழினம் என்பது என்றுமே ஒரு வேண்டப் படாத இனம்தான். அண்மைய சுனாமி இயற்கை அனர்த்தத்தின் போதும் இந்த விடயம் மற்றொரு தடவை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஒருமாதம் கடந்துவிட்டுள்ள நிலையிலும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புனரமைப்பு நடவடிக்கைகளில் தமிழர்தேசம் முற்றுமுழுதாகவே புறந்தள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. ஸ்ரீலங்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீட்பு மற்றும் மீள் கட்டமைப்புப் பணிகள் மிகமிக மந்த கதியிலேயே நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஸ்ரீலங்காவின் தெற்கைப் பொறுத்தவரையில் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீள்கட்டுமானம் என்று அசுரவேகத்தில் அனைத்துமே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரச இயந்திரங்கள் அனைத்துமே முடுக்கிவிடப்பட்டு தெற்கின் இழப்புக்கள் மேலும் மெருகூட்டலுடன் நிவர்த்திசெய்யப்பட்டு வருவதை அரச தொலைக்காட்சி தினமும் கட்டியம்கூறி வருகின்றது. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் என்று அனைவருமே தெற்கைக் கட்டியெழுப்பும் விடயத்தில் போட்டிபோட்டுக் கொண்டு களம் இறங்கியிருக்கின்றார்கள்.



தென்பகுதியைப் பொறுத்தவரையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைத் துப்புரவுசெய்யும் பணி முற்றாகவே பூர்த்தியடைந்துவிட்டன. மீள் கட்டுமாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு அரைவாசிக்கும் அதிகமாக நிறைவடைந்துவிட்டன. ஸ்ரீலங்காவின் தென்பகுதியைப் பொறுத்தவரையில் புனர்நிர்மாணப் பணிகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க, புதிய அபிவிருத்திப் பணிகளும் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாந்தோட்டையில் புதிய துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பமாகி இருக்கின்றது. அங்கு புதிய நகரம் ஒன்றை அமைக்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஸ்ரீபோபுர என்ற வீட்டுத்திட்டம் ஒன்றிற்கான அடிக்கல்லை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் அண்மையில் அங்கு நட்டுவைத்துள்ளார். 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை புதிய நகர வீட்டுத்திட்டத்தில், நவீன வசதிகள் கொண்ட 3000 புதிய வீடுகள் கட்டப்பட உள்ளன. இந்தப் புதிய நகரத்தினுள் வைத்தியசாலைகள், தபாலகம், பாடசாலை என்று பல உட்கட்டமைப்பு வசதிகளும் அமைக்கப்பட உள்ளன. வேலைகள் துரிதகதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆறுமாத காலப்பகுதிக்குள் இந்த அபிவிருத்தித்திட்டம் பூர்த்தியடைந்துவிட வேண்டும் என்பதில் அம்மையார் மிகவும் உறுதியாக இருக்கின்றாராம்.

அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் உள்ள மீனவக் கிராமங்கள் வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டு வருவதுடன், அப்பகுதியில் இருந்து கடற்கரைக்கு புத்தம் புதிய பஸ்கள் இலவச சேவையில் ஈடுபடுத்தப்பட இருக்கின்றனவாம். மீனவர்கள் தினமும் கடலுக்குச் சென்று தொழில் புரிந்துவிட்டு, தமது இருப்பிடம் திரும்புவதற்கு இந்த ஏற்பாடாம்.

**இலங்கையின் மொத்தப் பாதிப்பில் 71வீத பாதிப்பைப்பெற்ற வடக்கு கிழக்கை, நிவாரணங்கள் விடயத்தில் அரசாங்கம் முற்றாகவே புறக்கணிப்பது பற்றி பல்வேறு தரப்பினரும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.**

இத்தனைக்கும் இலங்கையில் பாதிக்கப்பட்ட மொத்தப் பிரதேசங்களுள் இந்த அம்பாந்தோட்டைப் பிரதேசத்தின் பாதிப்பு என்பது வெறும் 14வீதம் மட்டுமே.

இது இவ்வாறு இருக்க, மொத்தமாக இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தப் பாதிப்புக்களில், 71 வீதப் பாதிப்புக்கு உள்ளான பிரதேசமாகக் கணிக்கப்படுகின்ற வடக்கு கிழக்கில் என்ன நடக்கின்றது என்று பார்த்தால், 'பூச்சியம்' என்பது மட்டுமே பதிலாகக் கிடைக்கின்றது. வடக்கு கிழக்கிற்கு என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் எதவுமே வழங்கவில்லை என்கின்ற உண்மையை, தற்பொழுது சிங்களப் புத்திஜீவிகளே சங்கடத்துடன் வெளிப்படுத்தும் அளவிற்கு நிலைமை நிதர்சனமாகிக் கொண்டிருக்கின்றது.

சுனாமிப் பேரலை அனர்த்தம் இடம்பெற்று முதல் ஏழு நாட்களும் அரசு முற்றாகவே செயலிழந்து காணப்பட்டது. வரையறையின்றிய வெளிநாட்டு உதவிகளால், பின்னர் சுதாரித்துக் கொண்டு எழுந்த அரசாங்கம், புனர்வாழ்வு நிகழ்சித் திட்டத்தை வகுத்து களம் இறங்கியுள்ள போதிலும் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் அதன் நிவாரண நகர்வுகள், ஆமை வேகத்தையும் விட மோசமாகவே இருக்கின்றது.

தென்பகுதிகள் பற்றி மட்டுமே அக்கறை வெளிப்படுத்தி செயற்பட்டு வரும் அரசாங்கம் அவ்வப்பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு என்று ஏதாவது ஒரு பொதுவான அறிவித்தலை வெளியிடும். ஆனாலும் அந்த அறிவித்தல் வடக்குகிழக்கை சென்றடைவதில்லை என்பதுதான் நடைமுறை.

உதாரணத்திற்கு, கிழக்கில் மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசம்தான் மட்டக்களப்பில் உள்ள நாவலடிப் பிரதேசம். குறிப்பிட்ட இந்த நாவலடிப் பிரதேசமே இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு இன்றுவரை எந்த ஒரு கொடுப்பனவோ, அல்லது பூரண அரசாங்க நிவாரணமோ வழங்கப்படவில்லை என்பது, அரச நிவாரண அறிவித்தல்கள் எந்த அளவிற்கு தமிழ்மக்களைச் சென்றடைகின்றன என்பதற்கு உதாரணம். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இற்றைவரைக்கும் ஒருவருக்குத்தானும் மரணமடைந்தவருக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை. அரசாங்கத்தினதும், அரச இயந்திரங்களினதும் பாராமுகப் போக்கிற்கு ஒரு சிறிய உதாரணங்களே இவை.

முழுக்கமுழுக்க அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளில் மாத்திரமே தங்கியிருக்க வேண்டிய நிலையில் வடக்கு கிழக்கு மக்கள் தற்பொழுது இருக்கின்றார்கள்.

அப்படி இருக்கையில், அந்த நிறுவனங்களின் உதவிகளைக்கூடத் தட்டிப்பறிக்கும் கைங்கரியங்களில் அரசாங்கம் ஈடுபட்டுவருவதுதான் கொடுமையிலும் கொடுமை. அகதிமுகாம்களை இராணுவவீதியாக ஆக்கிரமித்து மற்றொரு அடிமை வாழ்விற்குள் தமிழ், முஸ்லிம் மக்களை அழைத்துச்செல்வது ஒருபுறம் இருக்க, நிவாரணங்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன்தான் வழங்கவேண்டும் என்கின்ற புதிய சட்டத்தை உருவாக்கி, வடக்கு கிழக்கு மக்களை நேரடியாகவே பட்டினிச்சாவை நோக்கி அழைத்துச்செல்ல அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கின்றது.

வன்னிக்கு என்று இத்தாலி அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ள மருந்துப் பொருட்களையும், மருத்துவ உபகரணங்களையும் அரசாங்கம் தடுத்து நிறுத்தி, "தமிழ்மக்களுக்கு நானும் வழங்க மாட்டேன்: மற்றவர்களையும் எதுவும் வழங்க விடமாட்டேன்" என்பதை உரத்துக் கூறிவருகின்றது.

இத்தனைக்கும், இலங்கைக்கு தேவைக்கு அதிகமாகவே நிதி கிடைத்துள்ளது என்பது நோக்கத் தக்கது. சுனாமி அனர்த்தத்தினால் இலங்கைக்கு 13 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக உலகவங்கி கணிப்பிட்டுள்ளது. ஆனால், இற்றைவரைக்கு சுனாமி நிவாரணமாக இலங்கை அரசாங்கத்திற்கு 13,694கோடி ரூபாய் வெளிநாட்டு நிதி கிடைத்துள்ளதாக திறைசேரி வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியம் 2,500 கோடி ரூபாயையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 1,000கோடி ரூபாயையும், ஜப்பான் அரசாங்கம் 2,560கோடி ரூபாவையும், இந்தியா 2,724கோடி ரூபாவையும், அமெரிக்கா 134கோடி ரூபாவையும், நோர்வே 115கோடி ரூபாவையும், ஐரோப்பிய ஒன்றியம் 1,400 கோடி ரூபாவையும் இதுவரை வழங்கியுள்ளன. இதே அளவிலான தொகை பெறுமதியான நிவாரணப் பொருட்களும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளன.

அப்படி இருக்கையில், இலங்கையின் மொத்தப் பாதிப்பில் 71வீதப் பாதிப்பைப்பெற்ற வடக்கு கிழக்கை, நிவாரணங்கள் விடயத்தில் அரசாங்கம் முற்றாகவே புறக்கணிப்பது பற்றி பல்வேறு தரப்பினரும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதியைச் சந்தித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்தின் பாகுபாடான நடத்தை குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.

அதேபோன்று, அண்மையில் சுவிஸ்லாந்து தூதுவரைச் சந்தித்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர், அரசாங்கத்தினால் திட்டமிட்ட முறையில் கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டு வருவது பற்றி முறைப்பாடு வெளியிட்டிருந்தனர்.

வடக்கு கிழக்கைப் புறக்கணித்து அரசாங்கம் தெற்கில் அதிக கரிசனை செலுத்திவருவது பற்றி பல்வேறு தரப்பினரும் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றார்கள். வெளிநாட்டு நிறுவனங்களும், சர்வதேச சமூகமும் கூட இந்த விடயத்தில் தமது அக்கறையை வெளிக்காண்பிக்க ஆரம்பித்து வருகின்றன.

சிங்களதேசம் தன்னை அப்பட்டமாக வெளிக்காண்பித்த மற்றொரு சந்தர்ப்பம் என்று இதனைக் கூறலாம்.

இதுவிடயத்தில் உதவி வழங்கும் சர்வதேசத்தின் பதில் என்ன? - இதுதான் இன்றுள்ள மிகப்பெரிய கேள்வி.

**– தென்னவன் –**



www.eelamview.com

# இனவாத அரசியலை அம்பலப்படுத்திய சுனாமி

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களினதும் - சிறிலங்கா சனாதிபதி திருமதி சந்திரிகா அம்மையார் அவர்களினதும் தலைமைத்துவ ஆற்றல்களையும், குணவியல்புகளையும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யும் ஒரு அளவுகோலாக சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னான அவர்களின் செயற்பாடுகளை சர்வதேச சமூகம் எடைபோட்டுப் பார்க்கின்றது.

அந்தப் பேரழிவில் சிக்கி உயிரிழந்த தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்கள் அனைவர்க்கும் அனுதாபம் தெரிவித்து தலைவர் பிரபாகரன் அறிக்கை விட்டதிலிருந்து, நிவாரண உதவிகள் இன பேதமில்லாமல் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று பாதிக்கப்பட்ட எல்லோர்க்கும் ஆதரவாக பொதுவாகக் குரல்கொடுத்து உன்னத மனிதாபிமான நிலைப்பாட்டை அவர் எடுத்திருந்தார்.

அலை அடித்து ஓய்ந்த உடனே, மிக விரைவாக, மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொறுப்புணர்வுடன் செயற்திறமை காட்டியது, இந்தப் பிராந்தியத்திலேயே புலிகள் இயக்கம்தான் என்பது இன்று ஒரு பொதுவான கருத்தாகிவிட்டது.

சந்திரிகா அம்மையாரும், சிங்கள உறுமய கட்சியினரும் இதை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அந்த உண்மை ஏகமனதாக உணரப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தின் கடற்புலி வீரர்களை - காவல்துறை உறுப்பினர்களை - போராளிகளை மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உள்ளிட்ட மனிதநேய உதவி அமைப்புகளின் தொண்டர்களை உடனடியாகவே களமிறங்கி மீட்பு நடவடிக்கையில் ஈடுபட தலைவர் உத்தரவிட்டிருந்தார்.

விளைவு! வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களே வியந்து - பாராட்டும் அளவுக்கு ஒரு அற்புதமான இடர்கால மீட்புப்பணியை புலிகள் இயக்கம் செவ்வனே நிறைவேற்றியுள்ளது. உயிர் ஆபத்திற்குள்ளும் தங்களை மீட்கவந்த புலிவீரர்களை அந்த மக்கள் நன்றியுடன் நினைவுகூருகின்றனர்.

**– எல்லாளன் –**

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் சிங்களப் படையினர் குறுக்கிட்டு - குழப்பங்களை விளைவித்தபோதும் பொறுமைகாத்து - மக்கள் பணியாற்றும்படி தலைவர் போராளிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

சில இடங்களில் அலைநீரில் சிக்கிய சிங்களப் படையாட்களை மீட்டு - இராணுவத்திடமே ஒப்படைத்த சம்பவங்களும் நடந்தேறியுள்ளன. அதேசமயம், கிழக்கு மாகாணத்தில் இனபேதம் காட்டாமல் பாதிக்கப்பட்ட அனைத்துச்சமூக மக்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிவாரண உதவிகளை வழங்கி தலைவரின் மனிதாபிமான நிலைப்பாட்டை - நிறைவேற்றிச் செயற்பட்டது.

கிளிநொச்சி வந்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்ட குழுவினருடனும் இனபேதமற்ற தனது மனிதாபிமான நிலைப்பாட்டையே தலைவர் முன்வைத்திருந்தார். அத்துடன் அனர்த்த முகாமைத்துவத்துடன் சமாதான முயற்சிகளையும் இணைத்துச் செயற்படுத்துவதே சிறந்தது என்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

சுனாமி அனர்த்தத்திற்குள் சிங்கள அரசைப்போன்று இனரீதியான அரசியலைப் புகுத்தும் சிறுமைத்தனத்தை புலிகள் இயக்கம் செய்யவில்லை.

பெருந்தொகைப் படையினர் இயற்கைச் சீற்றத்தில் பலியாகியிருந்தபோதும் - அதைப் பிரச்சாரப்படுத்தி குதூகலிக்கும் நாகரீகமற்ற அரசியலை புலிகள் இயக்கம் செய்யவில்லை.

அத்துடன் அழிவடைந்த பகுதிகளைப் பார்வையிடவந்த உலகத் தலைவர்களை முல்லைத்தீவு செல்லவிடாது தடுத்து அவர்களைச் சங்கடப்படுத்திய சிங்கள அரசின் இனவாதச் செயற்பாட்டை பெரிய விடயமாக எடுத்து அந்த உலகத் தலைவர்களை மேலும் சங்கடத்துக்குள்ளாக்காமல் அரசியல் நாகரீகத்துடன் புலிகள் இயக்கம் நடந்துகொண்டது.



இதேவேளை, கடந்த வருடம் தென்னிலங்கையில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சிங்கள மக்கள் பெரும் பாதிப்படைந்தபோது அங்கே நிவாரணப் பொருட்களுடன் சென்ற புலிகள் இயக்கம் சிங்கள மக்களுக்கு உதவிய மனிதாபிமான செயற்பாட்டையும் உலகம் அவதானித்தபடியே இருந்தது.

**அரச நிவாரணங்கள் இனரீதியாக வரையறுத்து - பாகுபாடாகவே நடந்தன. தமிழ்மக்களுக்குச் சென்ற நிவாரணப் பொருட்கள் படையினராலும் - ஜே.வி.பியினராலும் - சிங்களக் காடையர்களாலும் வழிமறிக்கப்பட்டு திசைதிருப்பப்பட்டன. இத்தகைய குற்றச் செயல்களுக்கும் எந்தவித சட்ட நடவடிக்கைகளையும் அம்மையாரின் அரசு எடுக்கவில்லை.**

இவ்விதமாக, தேவை ஏற்படும்போதும், தேசிய அளவில் நெருக்கடிகள் ஏற்படும்போதெல்லாம் புலிகள் இயக்கம் அரசியல் நாகரீகத்தையும் - மனிதாபிமான நிலைப்பாட்டையும் கடைப்பிடித்தபடி பண்பாக நடந்துகொண்டதை உலகசமூகம் அறியும்.

இவையெல்லாம் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் அபாரமான தலைமைத்துவ ஆளுமையினதும், சீரிய உயர் பண்புகளினதும் அரசியல் வெளிப்பாடுகளே என்பதை உலக சமூகம் எடைபோட்டிருந்தன.

ஆனால், சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா அம்மையாரோ இதற்கு முரணானதொரு அரசியல் செயற்பாட்டையே இந்த இடர்கால நெருக்கடி வேளையிலும் நடாத்தி வருகின்றார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உடனடி மீட்பு நடவடிக்கைகளை அரசு சரியாக நடாத்தியிருக்கவில்லை என்று ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

அரச தலைவியின் ஆளுமையின்மையும், அதன் விளைவான அரச இயந்திரத்தின் அசமந்தப்போக்குமே இந்த செயற்திறனின்மைக்கு முக்கிய காரணங்கள் என்பது உலக ஊடகங்களின் கருத்தாகும்.

அம்பாறை மாவட்டத்தின் அரச அதிபராக உள்ள சிங்கள அதிகாரி அனர்த்தம் நடந்தும் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. அம்பாறையில் சிங்கள மக்கள் பாதிக்கப்படவில்லை என்பதே அவரின் இந்த புறக்கணிப்புக்குக் காரணம். இது தொடர்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளின் கடுமையான அழுத்தத்தின் விளைவாக முஸ்லிம் அதிகாரி ஒருவர் அம்பாறையின் மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டார். அவரின் தலைமையிலேயே அம்பாறையில் அரச இயந்திரத்தின் இடர்காலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகையதொரு தேசிய அனர்த்தவேளையிலும் ஒரு சிங்கள அதிகாரி மனிதாபிமானமில்லாமல் தனது இனவெறி உணர்வை செயலில் காட்டியிருந்தபோதும் அவருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் சந்திரிகா அம்மையார் எடுக்கவில்லை. இது அம்மையாரின் இனவெறி உணர்வையே வெளிப்படுத்துகின்றது என்பதே உண்மையாகும்.

திருகோணமலை மாவட்டத்திலும் இதே நிலைமைதான் இருந்தது. அரச நிவாரணங்கள் இனரீதியாக வரையறுத்து - பாகுபாடாகவே நடந்தன. தமிழ்மக்களுக்குச் சென்ற நிவாரணப்பொருட்கள் படையினராலும் - ஜே.வி.பியினராலும் - சிங்களக் காடையர்களாலும் வழிமறிக்கப்பட்டு திசைதிருப்பப்பட்டன. இத்தகைய குற்றச் செயல்களுக்கும் எந்தவித சட்ட நடவடிக்கைகளையும் அம்மையாரின் அரசு எடுக்கவில்லை.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளை அண்மித்திருந்த சிங்கள மக்கள் இந்த மீட்பு நடவடிக்கைகளிலும் - நிவாரண முயற்சிகளிலும் மனிதாபிமானமாக நடந்துகொண்டனர் என்பதும் முக்கிய செய்திகளாகும்.

இலங்கைத்தீவை சுனாமி தாக்கியபோது தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாநிலங்களே பெரிதும் பாதிக்கப்பட்டன. இந்த உண்மையைக்கூட ஏற்கமறுத்த அம்மையார் தென்னிலங்கைதான் அதிகம் பாதிப்படைந்ததாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

உலகநாடுகள் வழங்கிய உதவிப் பொருட்களைக்கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமமாகப் பிரித்தளிக்க அவர் தவறிவிட்டார். இந்த இயற்கை அனர்த்தவேளையிலும் சிங்களவர் - தமிழர் என்று பிரித்துப் பார்த்து தனது இனவாதச் செயற்பாட்டையே காட்டியுள்ளார்.

முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருந்தும் - இலட்சக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்திருந்தும் - பில்லியன் ரூபா சொத்தழிவு ஏற்பட்டிருந்த இந்த துயர நேரத்திலும் அம்மையார் அவர்கள் புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை மிகைப்படுத்தி - மகிழ்ச்சி தெரிவித்து - கருத்துக்களை கூறிக்கொண்டிருந்தார்.

தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டார் - கடற்புலிகள் அழிந்துவிட்டனர் என்று தமது பேரினவாத ஆசைகளை வெளிப்படுத்தி - கேவலமான அரசியலையே சிங்கள அரசு நடாத்திக்கொண்டிருந்தது.

உலகநாடுகளின் நிதி உதவியுடன் 15 நகரங்களை புனரமைக்கப் போவதாக சந்திரிகா அம்மையார் அறிவித்திருந்தார். அதில் ஒன்றுகூட முல்லைத்தீவு மாவட்டத்திற்கோ - யாழ்ப்பாண மாவட்டத்திற்கோ ஒதுக்கப்படவில்லை.

மனிதாபிமானப் பயணம் மேற்கொண்ட உலகத் தலைவர்களை வன்னிப்பகுதிக்கு வரவிடாமல் தடுத்து அநாகரீக அரசியலையே அம்மையார் நடாத்தியுள்ளார்.

இவையெல்லாவற்றையும் உலகசமூகம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றது. இத்தகைய காட்டுமிராண்டி மனநிலையுடன் இருக்கும் ஒரு ஆட்சிப்பீடத்திடமிருந்து தமிழ்மக்கள் எவ்வாறு அரசியல் உரிமைகளை அமைதிவழியில் பெற முடியும்!? என்று உலகசமூகம் உணர்ந்திருக்கும்.

ஒருபுறத்தில் தேசிய ஆளுமையையும் - செயல்திறமையையும் கொண்ட ஒரு தலைமை செயற்பட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை இன்னொரு புறத்தில் இனவெறி உணர்வையும் - சோம்பேறித் தனத்தையும் கொண்டதொரு அரைகுறைத் தலைமை இலங்கைத்தீவில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை உலகசமூகம் அவதானித்தபடி உள்ளது. ■





www.eelamview.com

# சுனாமிக்குப்பின் இன்னொரு போர் சுனாமி நிதிப்போர்

சாரணன்

சுனாமிக்குத் தமிழும் தெரியாது சிங்களமும் தெரியாது. கறுப்பன் என்றும், வெள்ளையன் என்றும், மஞ்சள் இனத்தவன் என்றும் வேறுபாடு தெரியாது. ஆதலால் தமிழனையும், சிங்களவனையும், பௌத்தனையும், முஸ்லிமையும், சைவனையும் அசைவனையும் வேறுபாடின்றி ஆழிப்பேரலை அள்ளிச் சென்றது.


இவ்வாறு இன, மத, மொழி வேறுபாடுகளை சுனாமி பாராட்டாததுபோல் நாமும் இன, மத, மொழி வேறுபாடின்றி ஐக்கியமாய் வாழ்வோமென அலைகள் வந்துபோனதுபோல் சில சுடலைஞானக் குரல்கள் ஒலித்தன. இன, மத, வேறுபாடின்றி ஆழிப்பேரலையால் மக்களை அள்ளிச்செல்ல முடிந்ததுதான். ஆனால் சிங்கள உயர்குழாத்தின் மனங்களில் உறைந்துகிடந்த அந்த இனமேலாதிக்க உணர்வை, இன, மத, மொழிப் பாகுபாடுகளை ஆழிப் பேரலைகளால் சிறிதும் அள்ளிச்செல்ல முடியவில்லை.

சுனாமி மக்கள் திரளுக்குத் துயரைக் கொடுத்தது. ஆனால் ஆளும் உயர்குழாத்திற்கு அது உள்ளூரா மகிழ்ச்சியளித்தது. சுனாமி மூடுதிரைக்குள் மறைந்து நின்றுகொண்டு அரசியற் தீர்வை இழுத்தடிக்கவும், கதிரையைப் பலப்படுத்தவும் வரண்ட திறைசேரிக்குள் குளங்கட்டவும் அது ஆட்சியாளருக்குக் கைகொடுத்துள்ளது.


பாதுகாப்பரணான துறைமுகங்களுக்குள் எல்லாம் புகுந்து அங்குள்ளவற்றையெல்லாம் நினைத்த மாத்திரத்தே தாக்கியழிக்க முடிந்த அந்த அலைகளினால் சிங்கள இனவாதக் குகைக்குள் புகுந்து ஒரு துரும்பைத் தானும் அசைக்க முடியவில்லை.

மொழியில் பாகுபாடு, கல்வியில் பாகுபாடு, வேலை வாய்ப்பில் பாகுபாடு, அபிவிருத்தியில் பாகுபாடு, நிதியொதுக்கீட்டில் பாகுபாடு என இப்படி பாகுபாடுகளுக்கும் பாரபட்சங்களுக்கும் பழக்கப்பட்டுவிட்ட சிங்கள உயர்குழாம் சுனாமி நிதியைப் பாகுபாடின்றி உபயோகிக்குமென கற்பனைகூடப் பண்ண முடியாது. சுனாமி தாக்கிய விதத்தில் சமத்துவம் இருந்தது. ஆனால் சுனாமி தாக்கிய அழிவிலிருந்து மீளும் விதத்தில் சமத்துவம் இருக்க மாட்டாது.

சுனாமி அழிவுபற்றி சிங்கள உயர்குழாத்துப் பத்திரிகைகளிலும் மற்றும் தொடர்புச் சாதனங்களிலும் வெளியான செய்திகளிலும், செய்தி நோக்குகளிலும் இன மதப் பாரபட்சம் தெளிவாய்ப் பதிந்திருந்தது. சிங்கள வெகுஜன தொடர்புச் சாதனங்களும், உயர்குழாத்தினரும், ஆட்சியாளரும், சிங்கள அதிகார வர்க்கமும் (Bureaucraey) முற்றிலும் சிங்கள இன மயப்பட்டுள்ளன. ஆதலால் இயல்பாகவே அவர்களது பேனாக்கள் சுனாமி நிதியின் மீது சிங்களச் சார்பாய் செயற்படும். சிங்கள உயர்குழாம் பாகுபாட்டுடனும், இனப் பாரபட்சத்துடனுமான யாப்புக்களை உருவாக்கின. இதில் சு.க என்றும், ஐ.தே.க என்றும் வேறுபாடுகள் இருக்கவில்லை. இப்படியே பாரபட்சமான சட்டங்களை உருவாக்குகின்றனர். சிங்கள நீதித்துறை பாரபட்சமான தீர்ப்புக்களை வழங்குகின்றது. அமைச்சர்களும் அதிகாரிகளும் பாரபட்சமான நிர்வாக நடைமுறைகளை மேற்கொள்கின்றனர். சிங்களச் சிறைச்சாலைகளில், சிங்களச் சிறைக் காவலர் முன், ஏன் சிங்களச் சிறைக் காவலர்களால்கூட தமிழ்க்கைதிகள் கொல்லப்படுகின்றனர். இத்தகைய நடைமுறைகளைக்கொண்ட சிங்கள உயர்குழாத்தின் சட்டம், நீதி, நிர்வாகம் என்பவற்றின் கீழ் சுனாமி நிதி நீதியாகவும், நியாயமாகவும், சமத்துவமாகவும் பங்கிடப்படுமென்று ஒரு சிறுபிள்ளைதானும் நினைக்க முடியாது.





சட்டத்தில் சமத்துவத்திற்காகப் போராடுவதுபோல அதிகாரத்திலும், இறைமையிலும் சமத்துவமான பங்கிற்காகப் போராடுவதுபோல, அபிவிருத்தி நிதியொதுக்கீடு என்பவற்றில் சமத்துவத்திற்காகப் போராடுவதுபோல சுனாமி நிதியையும் சமத்துவமாகப் பகிர்வதற்காகப் போராடவேண்டிய நிலை தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

சிங்களச் சட்டங்களுடன் போராடிய தமிழர், இராணுவங்களுடன் போராடிய தமிழர், சுனாமியுடன் போராடிய தமிழர், இப்போது சுனாமி நிதியைப் பகிர்வதற்காகவும் போராடவேண்டியுள்ளது.

இதுவிடயத்தில் சுனாமி நிதியை இலங்கைக்கு அள்ளிவழங்கும் வெளிநாடுகளுக்குப் பெரும் பொறுப்புண்டு. சிங்கள ஆட்சியாளர்களை நம்புவதற்கான ஒரு சிறிய துரும்பைத்தானும் சிங்கள உயர்குழாம் கடந்த காலங்களில் விட்டுவைத்ததில்லை. எந்தவொரு சிங்களத் தலைவர்தானும் தமிழ் மக்களது மனங்களில் இடம் பிடிக்கக்கூடிய எந்தவொரு நற்காரியத்தையும் இதுவரை செய்திருக்கவில்லை. ஆதலால் தமிழ்மக்கள் ஒரு போதும் சிங்கள நீதியையும், சிங்கள வாக்குறுதிகளையும் நம்பமாட்டார்கள். இலங்கைத் தீவில் சுனாமியால் அதிகம் தாக்குண்ட பகுதி தமிழ் மண்தான். ஆதலால் சுனாமி நிதியின் பிரதான பகுதி தமிழ் மண்ணையே சார வேண்டும். இப்பின்னணியில் தமிழ் மண்ணைச் சுனாமி அழிவிலிருந்து மீட்டெடுக்கும் பணி தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப்புலிகளையே சார்ந்தது.

தமிழ்மக்கள் ஒரு போதும் நம்பத் தயாரற்ற சிங்கள ஆட்சியாளருக்குப் பதிலாக தமிழ்மக்களால் நம்பப்படும் தமிழரின் பிரதிநிதிகளான புலிகளால் இதைக் கையாளத்தக்க ஒரு நிலையை உறுதிப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு உலகநாடுகளுக்கு உண்டு. அலைக்குப்பின் தமிழ்மக்கள் இன்னொரு போரிற்கு முகம் கொடுக்கின்றனர். அது சுனாமி நிதிப்போர். சுனாமி நிர்வாகப் போர். சுனாமி அரசியலதிகாரப் போர். இந்த சுனாமி நிதிப்போர் இனப்போராட்ட வரலாற்றில் இன்னொரு பரிமாணம். இதன் வெற்றி தோல்வியின் தன்மையிலிருந்தே அடுத்த போருக்கான களம் விரிகின்றது. இந்த நிதிப்போர் எதனை எடுத்து வரும்? ■

**சட்டத்தில் சமத்துவத்திற்காகப் போராடுவதுபோல அதிகாரத்திலும், இறைமையிலும் சமத்துவமான பங்கிற்காகப் போராடுவதுபோல, அபிவிருத்தி நிதியொதுக்கீடு என்பவற்றில் சமத்துவத்திற்காகப் போராடுவதுபோல சுனாமி நிதியையும் சமத்துவமாக பகிர்வதற்காகப் போராடவேண்டிய நிலை தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது.**

**சிங்களச் சட்டங்களுடன் போராடிய தமிழர், இராணுவங்களுடன் போராடிய தமிழர், இப்போது சுனாமி நிதியை பகிர்வதற்காகவும் போராடவேண்டியுள்ளது.**



www.eelamview.com



# உலக சோகமாக சுனாமி அனர்த்தம் எவ்வாறு உருவெடுத்தது



















கடந்த காலங்களில் எத்தனையோ இயற்கை அழிவுகள் இவ்வுலகில் நிகழ்ந்துவிட்டன. குஜராத் பூகம்பம் - ஈரான் பூகம்பம் - ஜப்பான் பூகம்பம் - சீன வெள்ள அழிவுகள்... இப்படியே இவைகள் ஒவ்வொன்றின் போதும் பல பத்தாயிரம் மக்கள் மடிந்துள்ளனர். சீனாவில் நடைபெறும் வெள்ளப்பெருக்குகளில் இலட்சக் கணக்கான மக்கள் மடிவது வழமை.

ஆனால், சுனாமி அனர்த்தத்திற்கு உலக அளவில் கிடைத்து வரும் அனுதாபம் எந்த இயற்கை அனர்த்தங்களிற்கும் கிடைத்திருக்கவில்லை. உலக அரசுகளிடமிருந்து கிடைத்துவரும் உதவிகள் ஒருபுறம் இருக்க, உலக மக்களிடமிருந்து வாரிவழங்கப்படும் உதவிகள் மறுபுறமுமாக குவிந்தவண்ணமுள்ளன. தனிநபர்கள் பெருந்தொகையில் பணம் வழங்கிய, உதவி முயற்சியாக இந்த சுனாமி அனர்த்த நிகழ்ச்சி அமைந்துவிட்டது. இவ்வாறாக மாரிமழை போன்ற நிவாரண உதவிகள் வேறு எந்த இயற்கை அனர்த்தத்திற்கும் வாரி வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்தளவுக்கு சுனாமி அழிவுகள் ஒரு உலக சோகமாக உணரப்பட்டுள்ளன.

இதேசமயம், சுனாமி பாதித்த பகுதிகளுக்கு உலகநாடுகள் முண்டியடித்துக்கொண்டு தங்களது படைகளையும் உதவிக்கு அனுப்பியது போல முன்னர் எப்போதும் நடந்திருக்கவில்லை.

சுனாமி அனர்த்தத்திற்கு சர்வதேச உலகம் காட்டும் அக்கறைக்கு - அனுதாபத்திற்கு - கவலைக்கு என்ன காரணம்?

விடையாக பல விடயங்களைக் கூறலாம். இதுவரை நிகழ்ந்த இயற்கை அனர்த்தத்தில் ஒன்று அல்லது இரண்டு நாடுகள்தான் பாதிக்கப்பட்டிருந்தன. இம்முறை இந்துமா கடலின் சுமார் பத்து நாடுகள் பாதிக்கப்பட்டன. உலகின் கவனம் சுனாமி அழிவுகள்மீது திரும்பியதற்கு இது ஒரு காரணம்.

அடுத்தது, கொல்லப்பட்ட மக்களுள் ஐரோப்பிய - அமெரிக்கக் கண்ட நாடுகளது மக்களில் பல்லாயிரம்பேர் இருந்தனர். உல்லாசப் பயணிகளாக ஆசியநாடுகளுக்கு வருகை தந்திருந்த இந்த மேலை நாட்டு மக்களின் பெருந்தொகைச் சாவுகள் அந்தந்த நாடுகளில் சோக உணர்வுகளை விதைத்தன.

அதாவது, பத்து நாடுகளில் சுனாமி அழிவுகள் நடந்தாலும் சுமார் இருபது - இருபத்தைந்து நாடுகளது மக்கள் இந்த அனர்த்தத்தில் இறந்தனர். இதனால் இது ஒரு உலக சோகமாக உருவெடுத்தது.

பலம்வாய்ந்த உலக ஊடகங்களான பி.பி.சி, சி.என்.என்... போன்ற தொலைக்காட்சி நிறுவனங்கள் சுனாமி அழிவுக்காட்சிகளை உலகமக்களின் வீட்டிற்குள் இரவு - பகலாக கொண்டுசென்று தூவின. உலக சோகத்தை இது மேலும் பரப்பியது.

சுனாமி அலைகளின் பிரமாண்டத்தையும் - கரைகளில் அது நிகழ்த்திய கோரத் தாண்டவத்தையும் - மனித அவலங்களையும் பதிவு செய்த ஒளிநாடாக்களை உலகத் தொலைக்காட்சிகள் அனைத்தும் தத்ரூபமாக ஒளிபரப்பியிருந்தன. தங்களது வீடுகளில் இருந்தபடி இந்த அனர்த்தக் காட்சிகளைக்கண்ட மக்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். இயற்கை இவ்வளவு சக்திவாய்ந்ததா! என்று பிரமித்துப் போனார்கள். விஞ்ஞான விந்தைகளில் இலயித்திருந்த மானிடத்தை இயற்கையின் திருவிளையாடல் ஒன்று உலுப்பியெடுத்துவிட்டது.

இன்றைய தகவல் - தொழில்நுட்ப விஞ்ஞானம் உலகை ஒரு கிராமமாகக் கொண்டுவந்துள்ளது என்று கூறுவர். மனித அறிவின் வெற்றியை பிரகடனப்படுத்தும் ஒரு கருதுகோளாகவே அவ்வாறு கூறப்படுகின்றது. ஆனால், உலகை ஒரு கிராமம்போல இயற்கை உருட்டியெடுத்த விந்தைகண்டு மனிதகுலம் அதிர்ச்சியில் உறைந்துள்ளது.

இப்போது, தொழில்நுட்ப விஞ்ஞானிகளின் சாதனைகளை மெச்சுவதைவிட இயற்கை விஞ்ஞானிகளின் அறிவுரைகளை மனிதகுலம் செவிசாய்க்கத் தொடங்கிவிட்டது. அந்தளவுக்கு இந்துமாகடல் சுனாமி வரலாற்றுப்பாடம் ஒன்றை மனித குலத்திற்கு வழங்கிவிட்டது.

சாமானிய மக்களின் மனித சோகம் இவ்வாறு இருக்க இந்த அனர்த்தத்தைப் பயன்படுத்தி உலக வல்லரசுகள் தங்களது அரசியல் - பொருண்மிய அபிலாசைகளை நிறைவேற்றத் துடித்தது சுனாமி அனர்த்தத்தை மேலும் பரபரப்பாக்கியது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்துசமுத்திர நாடுகள் பாரிய விற்பனைச் சந்தையைக்கொண்ட மக்கள் தொகையுடன் உள்ளன. அந்தச் சந்தையைக் கைக்குள் வைக்க உதவிகள் என்ற பெயரில் பல்வேறு நாடுகளும் தூண்டில் போடுகின்றன.

அதேவேளை, உதவிப்பணி என்ற பெயரில் தங்களது வல்லரசு நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் விதத்தில் படைகளை அனுப்பி - தங்களது இராணுவ அபிலாசைகளையும் வெளிப்படுத்தியுள்ளன.

எங்கே படைகளை அனுப்பி தங்களது வலிமைகளைப் பறைசாற்றலாம் என்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் வல்லரசுகளுக்கு சிறிலங்கா போன்று சுயகௌரவம் அற்ற ஆட்சியாளர்களிடமிருந்து அழைப்புகள் வரும்போது முண்டியடித்துக்கொண்டு படைகளை அனுப்ப வசதியாகிப் போய்விட்டது. வந்த படைகள் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்ட பின்னர் இப்போது படிப்படியாகத் தங்களது நாடுகளுக்கு திரும்பத் தொடங்கிவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அழிவுகளுக்கும் - அது கொடுத்த சோகத்திற்கும் - இவை ஏற்படுத்திய பரபரப்புகளுக்கும் அப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்நிர்மாணப் பணிகள் உலகளாவிய ரீதியில் தொடங்கிவிட்டன. சிங்கள தேசத்திலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆனால், தமிழர் தாயகத்தில் செய்யப்படவேண்டிய வேலைகளுக்கான திட்டங்களை சிங்கள அரசு இதுவரை வெளியிடவில்லை. நிவாரணச் செயற்பாடுகளில் சந்திரிகா அரசு சரியாகச் செயற்படவில்லை என்று உலக ஊடகங்கள் அவரை குற்றம் சாட்டியிருந்தன. இப்போது புனர்வாழ்வுத் திட்டங்களிலும் அம்மையார் இனரீதியான அளவு கோலையே பயன்படுத்தி வருகின்றார்.

**அழிவுகளுக்கும் - அது கொடுத்த சோகத்திற்கும் - இவை ஏற்படுத்திய பரபரப்புகளுக்கும் அப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்நிர்மாணப் பணிகள் உலகளாவிய ரீதியில் தொடங்கிவிட்டன. சிங்கள தேசத்திலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆனால், தமிழர் தாயகத்தில் செய்யப்படவேண்டிய வேலைகளுக்கான திட்டங்களைச் சிங்கள அரசு இதுவரை வெளியிடவில்லை. நிவாரணச் செயற்பாடுகளில் சந்திரிகா அரசு சரியாகச் செயற்படவில்லை என்று உலக ஊடகங்கள் அவரை குற்றம் சாட்டியிருந்தன. இப்போது புனர்வாழ்வுத் திட்டங்களிலும் அம்மையார் இனரீதியான அளவுகோலையே பயன்படுத்தி வருகின்றார்.**

உலக உதவிகளை வேறு தேவைகளுக்குச் சிங்கள அரசு திசைதிருப்பிவரும் என்ற அச்சம் தமிழ்மக்களுக்கு உண்டு. உலக உதவிகளைப் பகிர்ந்து - செயற்படுத்த சிங்கள அரசும் - புலிகள் இயக்கமும் இணைந்ததொரு செயலணிக்குழுவின் தேவையை உலக நாடுகளும் வலியுறுத்தியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதன் மூலம்தான் அவர்கள் பெற்ற துயரிற்கு ஓரளவிற்கேனும் மருந்திடமுடியும். அந்த மனிதாபிமானப் பணியை இனபேதமில்லாமல் நடைமுறைப்படுத்துவதைத்தான் உலகசமூகம் விரும்புகின்றது. ●


www.eelamview.com

## 26ஆம் திகதி இடம்பெற்ற அனர்த்தம் எமது மக்களைப் பொறுத்தளவில் இரண்டாவது சுனாமியே

- தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -



# சுனாமியும் நாமும்

கடலடி நிலநடுக்கத்தால் எழும் பேரலைகள் ஜப்பான் மொழியில் சுனாமி எனப்படுகின்றன. கடலடி நிலநடுக்கம், கடலடி எரிமலை, புவி மேற்புறத் தகடுகளின் உராய்வு என்ற முக்காரணங்களால் ஆழிப்பேரலைகள் எழுகின்றன. கடலின் மேற்புறத்தில் காணப்படும் வழமையான அலை காற்றின் அழுத்தத்தாலும் சூரிய, சந்திரரின் இழுவையாலும் இரவு பகலாகத் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஆழிப்பேரலை எதிர்பாராத சடுதி நிகழ்ச்சி. இதன் காரணமாக அழிவுகள் மிகக் கூடுதலாக ஏற்படுகின்றன. பசுபிக் மாகடலில் ஜப்பான் தொட்டு கலிபோர்னியா வரையிலான பகுதியில் 'நெருப்பு வளையம்' **(RING OF FIRE)** இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. பசுபிக் மாகடலின் இருபுறமுள்ள ஜப்பான், வட அமெரிக்காவின் கலிபோர்னியா ஆகிய தரைப்பரப்புகளுக்கு அண்மையில் நிலநடுக்க வளையம் காணப்படுகிறது. இதன் காரணமாக பசுபிக் மாகடலில் ஆழிப் பேரலைகள் எழுந்தவாறு உள்ளன. கூடுதலாக ஜப்பான் தீவுகள் பாதிப்படைகின்றன. இவ்வகை அலைகளுக்கு ஜப்பான் நாட்டவர் வைத்த பெயர் இன்று எல்லா மொழிகளுக்கும் பொதுவான சொல்லாக வழங்குகிறது.

அமெரிக்காவின் ஐம்பதாவது மாநிலமான ஹவாய் தீவுத்தொகுதி அமெரிக்காவின் முப்பத்தியொராவது மாநில மான கலிபோர்னியாக் கடலோரத்திலிருந்து 2,400மைல் தூரத்தில் காணப்படுகிறது. இத்தீவுகளில் சுனாமித் தாக்கம் அதிகளவில் உண்டு. இங்குவாழும் மக்கள் கடலின் குண இயல்புகளை நன்கு உணர்ந்து உயிர்வாழக் கற்றுள்ளனர். கடல்நீர் வெகுதூரம் பின் நோக்கிச் செல்வதைக் கண்டால் இத்தீவு மக்கள் எதிர்த்திசையில் ஓடி மேட்டுப் பகுதிகளில் தஞ்சம் புகுவார்கள். பசுபிக் மாகடலின் நடுப்பகுதியில் இருக்கும் தீவுகளில் எரிமலைகள் வெடித்து அனல் கக்கிக் கொண்டே இருக்கும். கடலடியில் தோன்றிய எரிமலைகள் பல நூற்றாண்டு காலப் பகுதியின்பின் ஹவாய்த்தீவுகளாக எழுந்து நிற்கின்றன. சில தீவுகளில் இன்றும் அணையாத எரிமலைகள் காட்சி தருகின்றன.

ஆழிப்பேரலை அனர்த்தங்கள் பசுபிக் மாகடல் பிராந்தியத்தில் கூடுதலாக நடந்தாலும் இந்து மாகடல், அத்திலாந்திக் மாகடல் போன்ற வற்றிலும் அவை காலத்திற்குக் காலம் நடை பெறுவதை புவி வரலாறு உணர்த்துகின்றது. நவீன ஐரோப்பிய வரலாற்றில் மிகப்பெரும் சேதத்தை விளைவித்த ஆழிப்பேரலை 250 வருடங்களுக்கு முன்பாக நவம்பர் 01, 1755ஆம் நாள் போர்த்துக்கல் நாட்டில் நடை பெற்றது. இந்த நாட்டின் அத்திலாந்திக் கடலோரத்தில் நடந்த கடலடிப் புவிநடுக்கம் பிரமாண்டமான அலைகளைக் கிளப்பியது. தலைநகர் லிஸ்பன் **(LISBON)** மீது மோதிய கடலலைகள் லிஸ்பனில் மாத்திரம் 30,000 வரையிலான மனித உயிர்களைக் காவுகொண்டது. ஐரோப்பாவின் அப்போதைய நான்காவது மிகப்பெரிய நகரமாகவும், ஐரோப்பாவின் அதியுச்ச செல்வந்த நகரங்களில் ஒன்றாகவும் இருந்த லிஸ்பன் தனது பழைய நிலைக்குத் திரும்பாமல் இன்றுவரை நலிவுற்றுக் காணப்படுகிறது.

போர்த்துக்கல் நாட்டின் தென் கரையோரம், தென்மேற்கு ஸ்பெயின், வட ஆபிரிக்கா, என்பனவும் இவ்வாழிப் பேரலையால் பாதிப்படைந்தன. பெல்ஜியம், பிரித்தானியா, பிரான்சு, அயர்லாந்து, நெதர்லாந்து என்பனவும் போர்த்துக்கல்லுக்குச் சொந்தமான அத்திலாந்திக் கடலின் நடுவிலுள்ள அஸோர்ஸ் தீவுகளும் கரையோர அழிவுகளைச் சந்தித்தன. அன்று பதிவான உயிர் தப்பியோரின் வாக்குமூலங்களின்படி அண்மையில் நடந்ததுபோல் கடல் பின்னோக்கிச் சென்ற சிறிது நேரத்தின்பின் முழுமூச்சுடன் முன்னோக்கிவந்து தரைப் பகுதிக்குள் புகுந்து அழிவை ஏற்படுத்தியது. பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்ற போர்த்துக்கல் நாட்டில் இன்றும் ஆழிப்பேரலை சம்பந்தமான பீதி தீரவில்லை. தெற்கு ஆசியா சந்தித்த அனர்த்தத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக ஒரு சிறியரக நிலநடுக்கம் அங்கு ஏற்பட்டது. இப்போது போர்த்துக்கல் நாட்டு ஊடகங்கள் கேட்கும் முக்கிய கேள்வி இதுதான்: நவம்பர் 01, 1755இல் நடந்தது போல் மீண்டும் நடந்தால் அதை எதிர்கொள்ளத் தயாரா? தயாரில்லை என்று அவர்களே பதில் கூறுகிறார்கள்.

டிசெம்பர் 26, 2004வரை இந்திய - இலங்கை கடற்பகுதியில் ஆழிப் பேரலைகளுக்கு வாய்ப்பில்லை என்ற பரவலான கருத்து நிலவியது. கடற்கோள் என்பது தமிழர்தம் தொன்மை வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடைய சொற்றொடர். நிலவியல் நிபுணர்கள் கூற்றுப்படி மடகஸ்கார், இலங்கை, இந்தியா உட்பட டெக்கான் பள்ளத்தாக்கு வரையிலான பிரதேசம் ஒரே நிலத்தொகுதியாக இருந்ததென்றும் அது லெமூரியா கண்டம் என்று அழைக்கப்படு வதாகவும் கூறுகின்றனர். தமிழ் இலக்கியத்தில் இது குமரிக்கண்டம் எனப்படுகின்றது. அமெரிக்காவின் கோர்னெல் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவினர் கொன்ட்வானா என்ற பெயரில் இலங்கை நாடு மடகஸ்கார் தொட்டு அவுஸ்திரேலியா வரை பரந்து கிடந்ததாகவும், இப்போதைய இலங்கைத்தீவு அதன் ஒரு சிறுபகுதி என்றும் தெரிவிக்கின்றனர். மாலைதீவு மற்றும் இலட்சதீவுத் தொகுதிகளின் விலங்கியல் மற்றும் புவியியல் **(THE FAUNA AND GEOGRAPHY OF MALDIVES AND LACCADIVES ARCHIPELAGO)** என்ற நூலை எழுதிய ஜே.எஸ்.கார்டினர், "இலங்கை, மடகஸ்கார், மாலைதீவு ஆகியவை முன்னொருகால் இணைந்திருந்தன." என்கிறார். மடகஸ்கார் தீவு கோமார் **(KOMAR)** என்ற பெயரால் வழங்கப்படுவதும், அங்குவாழும் மக்கள் கொம்றி **(KOMRI)** என்று அழைக்கப் படுவதும், அங்குள்ள கடல் கொமோறொஸ் **(COMOROS)** என்றும், சில தீவுகள் கொமேரோ **(COMERO ISLANDS)** எனப்படுவதும் குமரிக்கண்டம் முதலாயவற்றை நினைவுபடுத்துகின்றன. கடலில் மூழ்கிய முதுதமிழ் நிலமான குமரிக்கண்டம் பற்றிய ஆய்வுகள் முழுமை பெறாதிருப்பது கவலைக் குரியது.

**சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் மனிதநேயத் தலையீடு என்ற புதிய சர்வதேச அரசியல் கோட்பாடு தோற்றம் பெற்றுள்ளது. இதன் சாராம்சம் பின்வருமாறு: எந்தவொரு நாட்டில் பாரிய மனித உரிமை மீறல்கள் நடக்கின்றனவோ, அல்லது எந்தவொரு நாட்டில் அரச நிர்வாகம் முற்றாகச் சீர்குலைந்து பாரிய குழப்பமும் மனித அவலமும் நிகழ்கின்றதோ அல்லது இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழப்பும் பாரிய அழிவுகளும் நடைபெறுகின்றனவோ அவை தனியொரு நாட்டின் விவகாரம் அல்ல...**

ஆழிப்பேரலைகள் பெருமளவு நிலப்பரப்பை விழுங்குகின்றன, புதிய நிலப்பரப்புகளை உருவாக்குகின்றன. கடலடி நிலங்கள் மேலெழுந்து காலப்போக்கில் மனித வாழ்விடங்களாக மாறுகின்றன. மாற்றம் என்பதே மாறாத விதி என்ற நியதிக்கு அமை வாக இது நடைபெறுகின்றது. இலங்கைப் புதைபடிவத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ்.யூ.தெரனியகல **(Dr.S.U.DERANI YAGALA, FORMER DIRECTOR GENERAL OF ARCHAEOLOGY)** செய்த ஆய்வுகளின்படி கடற்கரையோரத்தில் காணப்படும் சரளைக் கற்கள் **(GRAVEL)** இலங்கைத்தீவின் பல பாகங்களில் காணப்படு வதாக அறிகிறோம். இலங்கையின் கீழ்ப் புறத்தே புந்தல **(BUNDALA)** எனும் பகுதி யில் கடல் மட்டத்திலிருந்து பதினைந்து மீற்றர் உயரத்தில் இவ்வகைக் கற்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. இவை 125,000 வருடங்கள் பழமை வாய்ந்தவை என்று காலநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மிகவும் பழமைவாய்ந்த கடலோரச் சரளைக் கற்கள் மாங்குளத்தில் காணப்படுவதாகவும், அவை கடல் மட்டத்திலிருந்து 60 தொடக்கம் 80மீற்றர் வரையிலான உயரத்தில் இருப்பதாகவும் தெரியவருகிறது. தான் இப்படிவத்தை காலக்கணிப்புச் செய்யவில்லை என்று டாக்டர் தெரனியகல தெரிவித்துள்ளார்.

ஆதி மனிதர்கள் பயன்படுத்திய புராதனக் கருவிகள் மாங்குளம் உள்ளிட்ட மேற்கூறிய கடலிலிருந்து எழும்பிய பகுதிகளில் கிடைப்பதாகவும் தெரனியகல தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். புவித் தகடுகளின் மோதல் காரணமாக இப்பகுதிகள் மேலெழும்பியுள்ளன. அது ஒரு மில்லியன் வருடங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் நடந்திருக்கலாம் என்பது ஆய்வாளர் முடிவு. இதில் கூறப்பட்ட ஆய்வுத் தரவுகள் அமெரிக்க பல்கலைக்கழகங்களான கோர்னெல் **(CORNELL)** மற்றும் ஹவட் **(HARVARD)** ஆகியவற்றில் வைப்பிலிடப் பட்டுள்ளன. தகடுகளின் உராய்வுப் பகுதிக்கு அப்பால் மிகவும் பாதுகாப்பான பகுதியில் இன்றைய இலங்கை இருக்கிறது என்று சொல்வது தவறு. இலங்கையின் கரையோரம் வேகமாக மாறிவருகிறது. அதன் உரு வமைப்பும் வரைபட விம்பமும் மாற்றம் அடை கின்றன. கரையோரத்தில் குடியிருப்புக்களை அமைப்பது மிகவும் ஆபத்தானது. யால சரணாலயத்திலும் கடல் மட்டத்திலிருந்து 40மீற்றர் உயரத்தில் கடலோரச் சரளைக் கற்கள் காணப்பட்டுள்ளன. பூமிப்பந்தில் 71வீதமானது நீராகவும் 29வீதம் நிலமாகவும் காணப்படுவதால் நிலப்பரப்பு மூழ்குவதற்கு கூடுதல் வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதே சமயத்தில் புதிய நிலம் தோன்றுவதற்கும், ஏற்கனவே உள்ள நிலம் உருவமைப்பு மாற்றம் அடைவதற்கம் சம அளவு வாய்ப்புக் கள் இருக்கின்றன.

பூமிப்பந்தின் உட்புறத்தே அதன் நடுப்பகுதியில் பூமியை ஒத்த வட்ட வடிவில் ஒரு இரும்பு மற்றும் நிக்கல் உலோக உருண்டை இருக்கிறது. இதுபற்றி ஆய்வுசெய்த அமெரிக்க கொலம்பியா பல்கலைக்கழகத்தின் லமொன்ற் - டொகேர்றி புவி ஆய்வு நிலையம் **(LAMONT - DOHERTY EARTH OBSERVATORY)** ஜூலை 1996இல் பல வியப்பூட்டும் தகவல் களை வெளியிட்டுள்ளது. சந்திரனின் பருமனுடைய இந்த உருண்டை பூமியைப் போல் தன்னைத் தான் சுற்றிக்கொண்டிருக் கிறது. பூமி தன்னைத் தான் ஒருமுறை சுற்றுவதற்கு 24 மணிநேரம் எடுக்கிறது. ஆனால் இந்த உட்பகுதி உருண்டை சற்றுக் கூடுதலான வேகத்தில் தன்னைத் தான் சுற்றுகிறது. அதனுடைய சுற்றுவேகம் எப்போதும் ஒரே வேகத்தில் இருப்பின் 400 வருடங்களில் பூமியிலும் பார்க்க ஒருசுற்றுக் கூடுதலாகச் சுற்றிவிடும் என்று இந்த ஆய்வு நிலையம் கூறுகின்றது. இப் பரபரப்பான ஆய்வுச்செய்தி ஜூலை 29, 1996 ரைம் சஞ்சிகையில் பிரசுரமாகியுள்ளது. பூமியின் நடுவே திடமான உருண்டை இருப்பது

➡


விஞ்ஞானிகளுக்கு ஏற்கனவே தெரிந்த உண்மை, அது சுற்றிக்கொண்டிருக்கிற செய்தி 1996இல்தான் தெரிந்தது.

பூமிப்பந்து உட்புறத்திலிருந்து வெளிப்பகுதி வரையில் மூன்று முக்கிய படலங்களைக் கொண்டது. மேற்கூறிய திடமான உட்புற உருண்டையை விட இன்னும் இரு பாகங்கள் இருக்கின்றன. உருண்டையைச் சுற்றி திரவநிலைப் பாறைகளும் உலோகங்களும் இருக்கின்றன. திரவப் பகுதிக்குமேல் 1,800மைல் வரையான தடிப்பில் மான்றில் **(MANTLE)** எனப் பெயரிடப்பட்ட பாறைப்படலம் காணப்படுகிறது. மான்றிலுக்குமேல் ஒப்பீட்டில் தடிப்புக் குறைந்த புவி மேலோடு இடம்பெறுகிறது. புவி மேலோட்டுப் பகுதியை கிறஸ்ற் **(CRUST)** என்று அழைப்பார்கள். புவி மேலோட்டின் தடிப்பு தரையில் 30 மைலாகவும் ஆழ்கடலடியில் 03 மைலாகவும் இருக்கலாமெனக் கணிப்பிடப்படுகிறது. புவி ஆய்வாளர் நோக்கில் (01) உட்புற உருண்டையும் அதைச் சுற்றியுள்ள திரவப்பகுதியும் 'கோர்' **(CORE)** என்றும் (02) அதற்கு மேலுள்ள பகுதி 'மான்றில்' **(MANTLE)** என்றும் (03) மேற்புற ஓடு 'கிறஸ்ற்' **(CRUST)** என்றும் அடையாளம் காணப்படுகின்றன. பூமியின் மேற்புறம் 'லிதொஸ்பியர்' **(LITHOSPHERE)** என்றும் அழைக்கப்படுவதுண்டு.

புவி மேலோடு 40கி.மீ தொடக்கம் 800கி.மீ வரையிலான தடிப்புள்ள 7 பெரிய மற்றும் 20 சிறிய துண்டுகளாக இடம் பெறுகின்றன. இவை 'ரெக்ரோனிக் பிளேற்ஸ்' **(TECTONIC PLATES)** எனப்படுகின்றன. தமிழில் கண்டத் தகடுகள் எனலாம். கண்டங்களும், கடல்களும் இத்தகடுகளின் மேற்புறத்தில் இருப்பதால், தகடுகள் நகரும்போது அவையும் சேர்ந்து இடம்பெறுகின்றன. 'கண்டப் பெயர்ச்சி' என்ற கோட்பாடு 1910இல் அல்பிறெட் வேக்கினர் **(ALFRED WEGENER)** என்ற ஜேர்மன் விஞ்ஞானியால் உருவாக்கப்பட்டது. இவருடைய கூற்றுப்படி 200 மில்லியன் வருடங்களுக்கு முன் ஒரேயொரு கண்டம் மாத்திரம் இருந்ததாகவும் அது பகுதி பகுதியாக காலப்போக்கில் உடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. உடைவுக்கு புவித் தகடுகள் காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. 1960கள் வரை வேகினரின் கோட்பாடுகள் ஆதரவு பெறவில்லை. தகடுகளின் இருப்பும் செயற்பாடுகளும் இக்காலப்பகுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் கண்டப் பெயர்ச்சிக் கோட்பாடு வலுப்பெற்றது.

தகடுகள் அசைவதற்கான காரணம் பூமியின் அசாதாரண உள்வெப்பம் எனப்படுகிறது. பூமியின் உட்புற வெப்பம் 5000பாகை பரனைற் என்று விஞ்ஞானிகள் மதிப்பிடுகின்றனர். ஒரு பாத்திரத்தில் கொதித்துக்கொண்டிருக்கும் நீரில் கொதிநீர் மேலும் கீழுமாகச் சுற்றுவதுபோல பூமியின் வெப்ப ஆவியும் சுற்றுகிறது. இது தகடுகளை அசைக்கப் போதுமானதாக இருக்கிறது. எல்லாக் கண்டங்களும் அசைந்தபடியே இருக்கின்றன. இதற்கு தகடுகளின் நகர்வு காரணமாகிறது. இதுதான் கண்டப் பெயர்ச்சியின் விளக்கம். கடந்த 30 வருடங்களாக தகட்டு நகர்வு விளக்கம் ஆதிக்கம் செலுத்துகிறது. நோர்வேயின் பேர்கன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கார்ஸ்ரன் ஸ்ரோறெற்வெற் **(KARSTEN STORET VEDT)** வெளியிட்ட கருத்துப்படி பூமி தன்னைத் தான் சுற்றுவதால் ஏற்படும் நீர், நிலக் குலுக்கல் பூமியின் நடுப்பகுதியில் இருக்கும் உலோகம் செலுத்தும் புவியீர்ப்பு என்பனவற்றையும் தகட்டு அசைவின் கூட்டுக் காரணங்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். எது எவ்வாறாக இருப்பினும் தகடுகள் நகர்ந்துகொண்டிருக்கின்றன, புவிமாற்றங்கள் தொடர்ச்சியாக நடக்கின்றன என்பன மறுக்கமுடியாத உண்மைகளாகும்.

பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் புவி நடுக்கங்கள் மேற்கூறிய தகடுகள் உராயும்போது அல்லது பலமாக மோதும்போது ஏற்படுகின்றன. புதிய தகடுகள் உருவாகும்போது, புவிநடுக்கம் அதற்குக் காரணமாக அமைகின்றது. அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சிக் கழகம் **(US GEOLOGCAL SURVEY)** வெளியிட்ட தரவுகளின்படி வருடமொன்றுக்கு மூன்று மில்லியனுக்கும் கூடுதலான புவிநடுக்கங்கள் நடைபெறுகின்றன. அதாவது, நாளொன்றுக்கு 8,000 புவிநடுக்கங்கள் என்ற விகிதத்தில். ஆனால் சில வருடங்களுக்கு ஒருமுறை நடப்பவைதான் ஊயிரழிவையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தும் வலுவுள்ளவையாக அமைகின்றன. புவிநடுக்கத்தின் வலு அளவீடு றிச்ரர் ஸ்கேல் **(RICHTER SCALE)** என்று அழைக்கப்படுகிறது. புவிநடுக்க அளவீடை உருவாக்கியவர் சாள்ஸ் றிச்ரர் என்ற அமெரிக்கப் புவியியல் விஞ்ஞானி. அவர் இவ்வளவீடை 1935இல் உருவாக்கினார். இந்த அளவீடின்படி 1 அல்லது 2 வலுவுள்ள புவிநடுக்கத்தால் யாதொரு ஆபத்தும் இல்லை. அவற்றை உணர்வதும் கடினம். வலுக்கூடியவை 10வரை செல்கின்றன. அவை பேரழிவை ஏற்படுத்துகின்றன.




**சுனாமி என்ற ஜப்பான்மொழிச் சொல் "நாமி" என்றால் அலைகள் "ற்சு" என்றால் துறைமுகம் அல்லது ஒடுக்கமான நிலப்பகுதி என்ற இரு சொற்களின் கூட்டாகும். சுனாமி என்றால் புயல் என்றும் அர்த்தம் கூறுவோர் உள்ளனர். பலநூறு கிலோமீற்றர் நீளமானதாகவும் பத்து மீற்றருக்கும் கூடிய உயரமுள்ளதாகவும், ஜெற் விமானத்தின் பறப்பு வேகத்திலும் கூடிய வேகமுடையதாகவும் சுனாமி அலைகள் இடம்பெறுகின்றன.**




டிசெம்பர் 26, 2004ஆம் நாள் சுமாத்திரா தீவின் ஆச்சே மாநிலத்திற்கு அருகாமையிலுள்ள கடலில் மிகப் பிரமாண்டமானதொரு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது பூமியின் அச்சை உலுக்கியதோடு பூமியில் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியது. இந்த நிலநடுக்கத்தின் றிச்ரர் அளவீடு 9 என்று கணிப்பிடப்பட்டுள்ளது. 1964 மார்ச்சு 27ஆம் நாள் அமெரிக்காவின் 49வது மாநிலமான அலாஸ்காவின் மிகப்பெரிய நகரமான அன்கறேஜ் **(ANCHORAGE)** பகுதியை உலுக்கிய நிலநடுக்கத்திற்கு நிகரானதாக சுமாத்திராவின் 9 அளவீடு இடம்பெறுகிறது. 26ஆம் நாளுக்குப்பின் தொடர்ச்சியாகச் சில நிலநடுக்கங்கள் இப்பகுதியில் ஏற்பட்டன. அவற்றின் சராசரி அளவீடு 5. பெரும்பாலான நிலநடுக்கங்களும் எரிமலைகளும் புவித்தகடுகளின் முட்டிமோதலால் ஏற்படுகின்றன என்று முன்பு கூறினோம். அதுதான் இங்கும் நடைபெற்றது. கடலடிப் பூகம்பத்தின் மிக முக்கிய விளைவாக சுனாமி அலைகள் தோன்றுகின்றன. பெரும் பாறைகளும் களிமண் குவியல்களும் கடலின் ஒரு பகுதியிலிருந்து இன்னோர் பகுதியில் விழும்போதும் சுனாமி அலைகள் கிளம்புகின்றன.

சுனாமி என்ற ஜப்பான்மொழிச் சொல் "நாமி" என்றால் அலைகள் "ற்சு" என்றால் துறைமுகம் அல்லது ஒடுக்கமான நிலப்பகுதி என்ற இரு சொற்களின் கூட்டாகும். சுனாமி என்றால் புயல் என்றும் அர்த்தம் கூறுவோர் உள்ளனர். பலநூறு கிலோமீற்றர் நீளமானதாகவும் பத்து மீற்றருக்கும் கூடிய உயரமுள்ளதாகவும், ஜெற் விமானத்தின் பறப்பு வேகத்திலும் கூடிய வேகமுடையதாகவும் சுனாமி அலைகள் இடம்பெறுகின்றன. டிசெம்பர் 26ஆம் திகதிச் சுனாமி அலை 600கி.மீ தூரத்தை 75 நிமிடங்களில் கடந்தது. இது மணிக்கு 480கி.மீ என்று அளவிடப்படுகிறது. கடலின் ஆழமான பகுதிகளில் சுனாமி அலைகளின் உயரம் அசாதாரணமாக இருப்பதில்லை. அப்படியான கடலில் பயணிக்கும் கப்பல்களின் கீழால் சுனாமி அலைகள் செல்வதை கப்பலில் இருப்போர் அவதானிப்பது கடினம். கரையை நெருங்கும்போது சுனாமி அலைகள் உயரக் கிளம்புகின்றன. 1960இல் தென் அமெரிக்காவின் சிலிநாட்டு கரையோரத்தில் 8.5 றிச்ரர் வலுவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிலிருந்து கிளம்பிய சுனாமி அலைகள் பசுபிக் மாகடலை குறுக்கறுத்துப் பாய்ந்து ஜப்பான் கரையோரம்வரை சென்றன. இதனால் ஜப்பான் பேரழிவைச் சந்தித்தது. பசுபிக் மாகடலின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு 24 மணிநேரத்தில் சுனாமி அலைகளை முன்னோக்கிச் செல்லமுடியும். இலங்கையின் கிழக்கு, தெற்குப் பகுதிகளைத் தாக்கிய அலைகள் 1400கி.மீ தூரத்தைக் கடந்து வந்துள்ளன. இத்தூரத்தைக் கடப்பதற்கு அவை ஒன்றரை மணிநேரம் எடுத்தன. அலை வருவதுபற்றி முன்னறிவித்தல் கிடைத்திருந்தால் பல மனித உயிர்களையும் பெறுமதிமிக்க சொத்துக்களையும் நிச்சயமாகக் காப்பாற்றியிருக்க முடியும். தவறுகளைச் சாதகமாக்கியபடி நாம் எதிர்வரும் காலத்தில் உயிர்காக்கும் திட்டங்களை வகுத்தல் வேண்டும்.

எங்கும் நடக்கலாம், எப்போதும் நடக்கலாம் என்பது மறுக்கமுடியாத உண்மையாக இருப்பினும் உலகின் மிகக் கூடுதலான சுனாமி அலைகள் பசுபிக் மாகடலில்தான் தோன்றுகின்றன. இதற்கு ஆயிரத்திற்கும் கூடுதலான எரிமலைகள் பசுபிக் கடலடியில் இருப்பது காரணமாக இருக்கிறது. மிகக் கூடுதலாகச் சுனாமியால் பாதிக்கப்படும் நாடுகளில் ஜப்பான் முதலிடமும், அமெரிக்காவின் மேற்குக்கரைப் பகுதியும், ஹவாய்த் தீவுகளும் அடுத்த இடம் வகிக்கின்றன. இந்த நாடுகள் சுய பாதுகாப்புக் கருதி மிகவும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளன. கருத்தூட்டல் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஜப்பானியப் பல்கலைக்கழகங்களில் இதுபற்றிய ஆய்வுகளுக்கு ஒரு கல்விப்பீடம் ஒதுக்கப் பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக பசுபிக் கடலடியில் நிறுவப்பட்ட முன்னறிவித்தல் சாதனங்கள்மூலம் தரைக் கட்டுப்பாட்டு நிலையங்களுக்கு தகவல் வழங்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்து மாகடலிலும் இப்படியான ஒழுங்குகள் செய்வது பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றன. டிசெம்பர் 26 அனர்த்தங்களை நாம் ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு தொழில் வசதிக்குத் தன்னும் கடலோரத்தில் வாழ்வதைத் தவிர்க்கவேண்டும். கள்ளப்பாடு போன்ற தாழ்வு நிலங்களில் குடியிருப்புக்களை அமைக்கக்கூடாது. அதேபோல், முல்லைத்தீவு போன்ற கடலுக்குள் நீண்டிருக்கும் தரைப்பரப்பின் ஓரத்தில் வாழாது உயரமான பின்பகுதிகளில் குடிபுகவேண்டும். தடுப்புச் சுவர்களை எழுப்புவது மூலம் ஆழிப்பேரலையின் மூர்க்கத்தைத் தணிக்கமுடியும். வருமுன் தடுப்பது எமது வருங்காலத் திட்டங்களின் அடிப்படை நோக்காக இருத்தல்வேண்டும்.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் மனிதநேயத் தலையீடு என்ற புதிய சர்வதேச அரசியல் கோட்பாடு தோற்றம் பெற்றுள்ளது. இதன் சாராம்சம் பின்வருமாறு: எந்தவொரு நாட்டில் பாரிய மனித உரிமை மீறல்கள் நடக்கின்றனவோ, அல்லது எந்தவொரு நாட்டில் அரச நிர்வாகம் முற்றாகச் சீர்குலைந்து பாரிய குழப்பமும் மனித அவலமும் நிகழ்கின்றதோ அல்லது இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழப்பும் பாரிய அழிவுகளும் நடைபெறுகின்றனவோ அவை தனியொரு நாட்டின் விவகாரம் அல்ல. மூன்றில் எதுவானாலும் அது உலகநாடுகள் யாவற்றின் பொது விவகாரம் என்பதால் பாதிக்கப்பட்ட நாட்டிற்குள் மனிதநேயப் பணியாற்றும் நோக்கில் உட்பிரவேசிக்கும் உரிமை உலகநாடுகளுக்கு உண்டு. இந்த அடிப்படையில் நாடுகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் டிசெம்பர் 26 அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குப் படையெடுத்துள்ளன. மனிதநேயப் பணிகளுக்கென வந்துள்ள பிறநாட்டு ஆயுதப் படைகளும் மருத்துவக் குழுக்களும் இக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே வந்துள்ளன. உலகநாடுகளும் பிற ஸ்தாபனங்களும் நிவாரணப் பணிகளுக்காக பெருமளவு நிதியைத் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளன. 1998ஆம் ஆண்டு மத்திய அமெரிக்க நாடான ஹொண்டுராஸ் "மிற்ச்" **(MITCH)** எனப் பெயரிடப்பட்ட பெரும் புயலால் பாதிக்கப் பட்டது. உலகநாடுகள் பெருமளவு நிதியைத் தருவதாக வாக்குறுதி அளித்தன. பல வாக்குறுதிகள் இன்றுவரை நிறைவேற்றப் படாமல் இருக்கின்றன. வாக்குறுதிகளை மாத்திரம் நம்பியிராது எமது நாட்டை நாமே கட்டியெழுப்பவேண்டும். எமது மக்களுக்கு எது தேவையோ அதை இனங்கண்டு நாமே அவற்றை நிறுவவேண்டும். இரு தசாப்தம் நீடித்த சுனாமியிலும் கொடிய போர் அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்த நாம் மிக அண்மையில் எம்மைத் தாக்கிய சுனாமியில் இருந்து மீள நிச்சயம் முடியும்.

**-கலாநிதி க.சோமாஸ்கந்தன்-**

# கோரங்கள் தாங்கிய வாழ்வு

தமிழ்மக்களின் தாயக விடுதலைப்போரில் பேரினவாத சிங்கள அரசின் கூலிப்படைகளால் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள், இழப்புக்கள் அவர்கள் அனுபவித்த அவலங்கள் அத்தனையும் எம்மக்களின் மனங்களில் என்றுமே மறக்கமுடியாத வடுக்களை ஏற்படுத்தி நிற்கின்றன.

தமிழ்மக்களின் பூர்வீக நிலங்கள் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, அந்நிலங்களிலிருந்து மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர், திட்டமிட்டுக் கொலைசெய்யப்பட்டனர். பெண்கள் அநாகரிகமான முறையில் மானபங்கப்படுத்தப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டன, இருப்பிடங்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. மக்கள் உயிர்காப்புத்தேடி காடுகளிலும் வனாந்தரங்களிலும் அலைந்து வாழ்ந்தனர். அகதிமுகாம்களில் அல்லற்பட்டனர். அந்த அகதிமுகாம்கள்கூட சிங்கள அரக்கர்களின் கொலை முகாம்களாகவும் மாற்றப்பட்டன. இவ்வாறு தொடர் கொடுமைகள் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்டன.

தென் தமிழீழத்திலே பல தமிழ்க் கிராமங்கள் யுத்த சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி சிங்கள இராணுவத்தால் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. வவுணதீவுக் கிராமம், மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் எட்டுக் கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. மட்டக்களப்பு நகரையும் படுவான்கரைப் பிரதேசத்தையும் இணைக்கும் வலையிறவுப் பாலம் வவுணதீவுக் கிராமம் மீதான சிங்கள இராணுவத்தின் தொடர் ஆக்கிரமிப்பின் கருவாகிவிட்டிருந்தது.

1985ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிங்கள இராணுவத்தின் தொடர் அழிப்பிற்கும், சுற்றிவளைப்புக்கும் இக்கிராமம் உள்ளாக்கப்பட்டிருந்தது. இதனால் பலர் திட்டமிட்டு கொலைசெய்யப்பட்டனர். கைதிகளாக்கப்பட்டு காணாமல் போயினர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். வாழ்விடங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன. இவ்வாறு தொடர் நெருக்கடியை எதிர்கொண்டனர். தமது சொந்த இடங்களை விட்டு பலதடவை இடம்பெயர்ந்து நிரந்தரத் தொழிலின்றி நிம்மதியிழந்து நிர்க்கதியாகி நின்றனர்.

சுமார் பதினைந்து வருட இடம்பெயர்வின் பின் மீண்டும் தற்போது தமது சொந்த இடங்களுக்கு மக்கள் திரும்புகின்றனர். சிங்கள இராணுவத்தால் சிதைக்கப்பட்டு, உருக்குலைக்கப்பட்டு புதர் மண்டிக்கிடந்த வாழ்விடங்கள் வெட்டி வெளியாக்கப்பட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஓலைக்குடிசைகள் உருப்பெறுகின்றன.

1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் வலையிறவுப்பாலம் அமைக்கப்படவில்லை. அதனால் மட்டக்களப்பு நகர் செல்லும் மக்கள் வவுணதீவுத் துறையூடாக தோணிகளில் தங்கள் பிரயாணத்தினை மேற்கொண்டனர். அப்போது வலையிறவுப் பகுதியில் பாரிய விமானப்படை முகாமொன்று அமையப்பெற்றிருந்தது. இதனைத் தாண்டியே மக்கள் மட்டக்களப்பு நகர் செல்லவேண்டும். பல அச்சுறுத்தலுக்கு மத்தியிலே மக்கள் பயணம் செய்தனர். மண்முனை மேற்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து தமது நாளாந்த அலுவல்களுக்காக மட்டக்களப்பு நகர் செல்லும் மக்கள் கூட்டம் வவுணதீவுத் துறையடியில் தினமும் காணப்படுவது வழமை. இந்த மக்களை எப்படியாவது அழித்துவிடவேண்டுமென சிங்கள இராணுவம் எண்ணியது. அப்போதைய காலப்பகுதியில் கரடியனாறு, ஆயித்தியமலை, கொக்கட்டிச்சோலை என எல்லாத் திசைகளிலும் வவுணதீவை முகாங்கள் சூழ்ந்திருந்தன.

சிங்கள இராணுவத்தால் காலத்துக்குக் காலம் வவுணதீவுக் கிராம மக்களுக்கு ஏற்பட்ட கொடுமை பற்றி அக்கிராமத்தைச் சேர்ந்த அழகரைத்தினம் கண்ணீருடன் கூறினார்.

"அந்த நாளையில சிங்கள ஆமிக்காரன் எண்டால் எங்களுக்குச் சரியான பயம். தமிழ் ஆட்களை சுட்டும், வெட்டியும் வாறானுகளாம் என்று கேள்விப்பட்டால் எங்களுக்குச் சரியான குலைநடுக்கம். எண்பத்தைந்தாம் ஆண்டளவில வலையிறவுப்பாலம் கட்டல்ல. அதனால மட்டக்களப்பு ரவுணுக்குப் போற ஆக்களெல்லாம் வவுணதீவுத் துறையாலதான் வலையிறவு ஆத்தைக் கடந்து தோணியில போவாங்க. அரச உத்தியோகத்தர்கள், பள்ளிப் பிள்ளைகள், விறகு வியாபாரிகள் எண்டு, தினமும் வவுணதீவுத் துறையடியில மொச்சுக் காணப்படுவாங்க."

"1986ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி எண்டு நினைக்கிறன், விடிய எட்டு மணியப்போல இருக்கும். சரியான மழை பெய்துகொண்டு இருந்திது. ரவுணுக்குப் போறத்துக்காக சனமெல்லாம் தோணியப் பார்த்துக்கொண்டு நிண்டாங்க."

**– நிர்மலன் –**

திடிரெண்டு ஏதோ ஒரு பெரிய வாகனம் இரையிற சத்தம் கேட்டது. அங்க என்னத்தப் பார்க்கிற! கரடியனாற்றுப் பக்கமிருந்து கவச வாகனத்தில சிங்கள ஆமிக்காரனுகள் சுட்டுகொண்டு வந்தானுகள். துறையடியில நிண்ட ஆட்களெல்லாம் நாலாபக்கமும் சிதறி ஓடிச்சு. சிலர் தோணிகளை எடுத்திட்டு மாந்தீவுப் பக்கம் ஓடினாங்க. ஓடின ஆட்கள் தப்ப முன்னரே கவசவாகனம் துறையடிக்கு வந்து தோணியில தப்பிச் சென்றவர்களை நோக்கி முழங்கத் தொடங்கிற்று. ஒரு தோணியில சென்ற ஆறுபேரும் ஆற்றுக்குள் விழுந்தாங்க. அதில் நாலுபேர் உயிர் அவ்விடத்திலேயே பிரிஞ்சிட்டுது. கொல்லப்பட்ட நால்வரில் படுவான்கரைப் பகுதியைச் சேர்ந்த சிறந்த பத்திரிகையாளர் ஒருவரும் ... " என அன்றைய காலை வவுணதீவுத் துறையடியில் படிந்த இரத்தக் கறையினை கண்கள் பனிக்கக் கூறினார்.

வவுணதீவுக் கிராமத்தையண்டி வாவியைக் கடந்து செல்லும் வலையிறவில் சிறிலங்கா விமானப் படையினரின் பாரிய முகாமொன்று காணப்பட்டதால் அவர்களின் பாதுகாப்புக் கருதி எப்படியாவது வவுணதீவுக் கிராம மக்களை அவர்களின் இடத்திலிருந்து விரட்டியடிக்கவேண்டுமென்ற நோக்குடன் தொடர் செல் வீச்சுக்கள், துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றினை இடையிடையே மக்கள்மீது இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

அல்லும் பகலும் தமது உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு நிம்மதியிழந்து சீவியம் நடாத்தினர் அந்தக் கிராமத்து மக்கள். வவுணதீவு மக்களுக்கு நடைபெற்ற மற்றுமொரு சம்பவம் பற்றி இக்கிராமத்தைச் சேர்ந்த வடிவேல் என்பவர் கூறுகையில்:

"1986ஆம் ஆண்டு ஆனி மாதம் விடியச்சாமம். மட்டக்களப்பிலிருந்து பெருந்தொகையான இராணுவத்தினர் படகுகள் மூலம் வவுணதீவுக் கிராமத்தை நோக்கி கொலைப் பசியுடன் வந்திறங்கினர். இதனைக்கண்ட நாங்கள் கண்ணில்பட்ட பொருட்களைக் கையில் எடுத்துக்கொண்டு ஓடினோம்."

"ஆமிக்காரனுகள் எங்கள் ஊரைப் பார்க்க சுட்டுச் சுட்டு ஓடிவாறானுகள். நான் எனது இளைய மகளைத் தூக்கிக்கொண்டு எனது மற்றப் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு சனத்தோடு சனமாக ஓடினன். அப்போது பார்த்தால் வலையிறவு எயாப்போட்டில இருந்து ஹெலியும் எழும்பி வாறான். எழும்பிவந்த ஹெலி எங்கட கிராமத்துக்கு மேலா வந்து வளைச்சு, ஓடின சனத்தைப் பார்த்து சுட்டான்."

"கீழால வாறவன் சுடுறான், மேலால வந்தவனும் சுடுறான். சனமெல்லாம் கத்திக் கூச்சல்போட்டு ஒப்பாரிவைத்து ஓடினர்."

"ஓடியவர்களில் எனது மருமகன் மற்றும் எனது தம்பி முறையான ஒருவரும் ஹெலிக்காரன் அடிச்ச அடியில் தலையில் வெடிபட்டு அந்த வயலுக்குள்ளேயே அவர்களின் உயிர் பிரிந்தது. ஹெலிக்காரன் சனங்களை விட்டபாடில்லை. மரங்களிலும் வரம்புக் கட்டுக்கு மறைவாலும் ஒழிந்து ஒழிந்து ஓடினோம். வெடிபட்டு இறந்தவர்களைக்கூடப் பார்க்கமுடியாமல் ஓடினோம். ஓடிய நாங்கள் ஆயித்தியமலை, மகிழவெட்டுவான், கரவெட்டி போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளில் அகதிகளாய் தஞ்சம் புகுந்தம்."

"எங்கட கிராமத்துக்கு வந்த ஆமிக்காரனுகள் வீடுகள் சிலவற்றை எரித்தான். வீடுகளில் காணப்பட்ட பொருட்களைக் கொள்ளையிட்டான். பொழுது கருகேக்க ஆறு மணியளவில மட்டக்களப்புக்கு திரும்பிச் சென்றுவிட்டான். அண்டையிலிருந்து ஒருசில நாட்களுக்கு மக்கள் ஊர்ப்பக்கம் வரவேயில்ல. அகதிகளாய் பாடசாலையிலேயே கிடந்தம். ஆண்களில் சிலர் பகல் நேரத்தில் கிராமத்தைப் பாாத்துவிட்டு மாலையானதும் ஈச்சந்தீவு, ஆயித்தியமலைப் பக்கம் சென்றுவிடுவம்".

"ஒரு ஐந்து நாட் கழிய சனமெல்லாம் வந்து ஆமிக்காரன் பத்தவச்ச வீடுகளை ஒருமாதிரியாக திருத்திக் கிருத்தி குடியிருந்திச்சு. பகல்வேளையில் வீட்டில் இருந்துவிட்டு இரவானதும் ஈச்சந்தீவு, கரவெட்டி, ஆயித்தியமலை போன்ற கிராமங்களில் தங்கிச்சு. மறுகா இருபத்திநாலாந் திகதி விடிஞ்சு ஒம்பது மணியிருக்கும், திடிரென எயாபோட்டில இருந்து எழும்பின ஹெலிக்காரன் எங்கட ஊரை வளைச்சு சுடத்தொடங்கீட்டான். சனமெல்லாம் என்ன செய்வதென்று தெரியாம அல்லோலகல்லோலப்பட்டு சிதறியோடிச்சு. அவன் அடிச்ச அடியில ஒரு வீட்டில இருந்த தாயும் இரண்டு பிள்ளைகளும் வெடிபட்டு செத்துப்போச்சுது. ஐந்து பேர்வரை காயமடைஞ்சாங்க. அண்டையிலயிருந்து ஊரவிட்டு ஓடினனாங்க, ஒரு வருசமா இஞ்சாலப் பக்கமா வரயில்ல."

மறுகா எண்பத்தேழிலை சொந்த இடத்திற்கு வந்து காடு மேடாய்க் கிடந்த இடங்களை வெட்டி வெளியாக்கி சீவியம் நடாத்தி வரேக்கை சரியா நாளை மறந்திட்டன், ஒரு அதிகாலை மட்டக்களப்புப் பக்கமிருந்தும், கொக்கட்டிச்சோலைப் பக்கமிருந்தும் கவச வாகனங்களுடன் ஏராளமான ஆமிக்காரனுகள் வந்தானுகள். இதைக்கண்ட சனமெல்லாம் ஓட்டமெடுத்திச்சு. சனங்கள் ஓடுவதைக்கண்ட ஆமிக்காரன் சுடத்தொடங்கீட்டான். அதில் ஐந்தாறுபேர் வெடிபட்டு செத்துப்போட்டினம். திசைமாறி ஓடிய சிலர் ஆமிக்காரன் கையில்



அகப்பட்டிச்சினம். கைது செய்தவர்களைக்கொண்டு தனக்குத் தேவையான பொருட்களையெல்லாம் எடுத்துவிட்டு அன்று இரவு கட்டாக்காட்டு ஆற்றுக்குக் கொண்டுபோய் அவங்களை பொல்லால் அடிச்சு சாகவச்சுப்போட்டாங்க."

"அண்டைக்கு வந்த ஆமிக்காரனுகள் இன்னுங்கூடப் போகேல்ல. வவுணதீவுச் சந்தியில பெரிய கேம்ப் ஒன்றை அமைச்சுப்போட்டாங்க. மக்கள் நிரந்தரமாகவே வவுணதீவுக் கிராமத்தை விட்டு வெளியேறிச்சினம்."

அந்த முதியவர் தமது சொந்த ஊரிலிருந்து தாம் எவ்வாறு துரத்தப்பட்டனர் என்ற கொடிய அந்த நினைவுகளைக் கூறினார்.

சிறிலங்கா இராணுவத்தால் மட்டுமன்றி இந்திய இராணுவத்தாலும் வவுணதீவுக் கிராமம் சிதைத்துச் சீரழிக்கப்பட்டது. எண்பத்தியாறு முதல் தொண்ணூற்றியேழு வரை சொல்லோண்ணாத் துன்ப துயரங்களை அனுபவித்தனர். வவுணதீவுக் கிராமத்தில் சிங்கள இராணுவத்தால் ஓட ஓட விரட்டி சுடப்பட்டு சுமார் முப்பத்தியாறுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். பலர் கைதுசெய்யப்பட்டு காணாமல் போயினர். பத்தொன்பது வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், மீண்டும் மீள்குடியேறியிருக்கும் வவுணதீவுக் கிராமம் இன்னும் முட்கம்பி வேலிகளால் தடுக்கப்பட்ட வீதிகளின் ஊடாகவே அச்சத்துடன் பயணத்தைத் தொடர்கின்றது, அதன் அன்றாடமும் கூடத்தான்.

*அந்த நாளையில சிங்கள ஆமிக்காரன் எண்டால் எங்களுக்குச் சரியான பயம். தமிழ் ஆட்களை சுட்டும், வெட்டியும் வாறானுகளாம் என்று கேள்விப்பட்டால் எங்களுக்குச் சரியான குலைநடுக்கம். 1985ஆம் ஆண்டளவில வலையிறவுப்பாலம் கட்டல்ல. அதனால மட்டக்களப்பு ரவுணுக்குப்போற ஆட்களெல்லாம் வவுணதீவுத் துறையாலதான் வலையிறவு ஆத்தைக்கடந்து தோணியில போவாங்க...*



# ஆழத்துயர் புதைத்து மீளல்

வானக்கூரையின் கீழேயொரு வாழ்வுசமைத்து
வாசலெங்கும் பூவாய் மலர்ந்திருந்தோம்.
காற்றுக்கு கையசைத்து
குயிலுக்கு குரல் வழங்கி
மழையின் பாதங்களுக்கு கொலுசு மாட்டி
சின்ன ஜீவிதமெனினும் சிரித்திருந்தோம்.
சுமையற்றிருந்ததால்
வலியற்றிருந்தது எம் வாழ்வு.
வெளியே தெரியவராத வெளிச்சமாய்
அழகெழுதிக்கிடந்தது அன்றாடம்.
இடையில் வந்தனதான்
இத்தனை இடியும் வதையும்.
காலவெள்ளம் கரைக்கக் கரைக்க
வாழ்வின் சுவர்கள் வலிமையிழந்தன.
இடிமேல் இடியிறங்க
குட்டிச்சுவரானது தமிழர் வாழ்வு.
மழையிற்கரைந்து சிதிலமுற்ற சுவரை
பூகம்பப்பேய் பிய்த்தெறிந்தது இன்று.
'சுனாமி'
என்ன பெயர்கொண்டு அழைத்தாலும்
எமக்கிது எமன்.
வாழ்வைக் குதறிய வல்லூறு.
26.12.2004 ஞாயிற்றுக்கிழமை
அன்றும் வழமைபோற்தான் விடிந்தது.
எந்த அசுமாத்தமுமின்றிக் கிடந்தது கடல்.
மடியேறுவோரைச் சுமந்தும்
கரைவாழுவோருடன் மகிழ்ந்தும்
படகோடும் வலையோடும் கலகலத்தபடி
'கனககுதுகலம்' பாடியது கடல்.
உள்ளே மீன்களும்
வெளியே பறவைகளும்
கடலின் பாடலுக்குத் தாளமிட்டன.
எல்லாம் வழமைபோற்தான் வடிவுகாட்டின.
எவரறிவார் இப்படியும் இடிவிழலாமென்று?
வந்தது இடி.
என்ன நடக்குதென எவருக்கும் தெரியாமல்
வந்ததும் போனதுமான சில கணங்களில்
வரைபடமே மாறிவிட்டது.
அழகுமுகம் மாறி அழுகைமுகமானது கரை.
விடிந்தபொழுது இருண்டுபோனது.
கடலள்ளிப்போனது
எங்கள் காவிரிப்பூம்பட்டினங்களை.
சுழிக்குள் அள்ளுண்டோரின்
அபயக்குரல்களை உள்ளேயமுக்கி
உயிர்கொண்டுபோனது அலை.
ஊர்கள்
உறவுகள்
வேர்கள்
விழுதுகள்
பூக்கள், பிஞ்சுகள், காய்கள், பழங்களென
பசியாறிப்போனது பாழ்பட்ட கடல்
எதையும் விடவில்லை எமன்.
ஓடிச்சென்று பார்த்தவர் முன்னே
ஒன்றுமிருக்கவில்லை.
முகம்சிதைந்த கரையும்
உயிர்குடித்து வீசிய உடல்களுமே
இந்தா எடுத்துப்போ என்பதாய் கிடந்தன.
ஒற்றைக்குருவி தனித்திருந்து தேம்புதல்போல்
ஆயிரமாயிரம் உயிரற்ற சடலங்கள் முன்னே
ஒருசில உயிருள்ள சடலங்கள் அழுகின்றன.
எல்லோரும் பிணங்களாய்
எல்லோரும் ஊமையராய்
எல்லோரும் வலுவற்றவராய்
எழுந்துலவும் மரங்களெனத் திரிகின்றனர்.

புலி உலைக்களம்

இனி என்ன வந்தென்ன?
இந்திரபுரிகள் இடிந்துவிட்டனவே
நிலவிற்குளிக்கும் சிற்றில்களும்
உள்ளிருக்கும் உயிர்களும் போயினவே.
அழகு போனது
அம்பாப்பாட்டு போனது
கூத்துப் போனது
கும்மாளம் போனது
கட்டுச்சோறு கட்டி கரைவந்து
கையசைக்கும் காதலியர் போயினர்.
மடிநிறைந்து கரைதிரும்ப ஓடிவரும்
உரிஞ்சான்குண்டிச் செல்வங்களில்லையே.
கடல்வற்றி நிலமான விந்தையும்
கறுப்பு நிறமாகி அலைவந்த அதிசயமும்
புரிவதற்கும் அறிவதற்கும் நெடுநாளாகும்.
அறியப்படாமலும் போகலாம்.
விஞ்ஞான சூத்திரங்கள் விடுவிக்கப்படும்போது
விதியா இது சதியா என்பது விளங்கும்.
என்ன நடந்தாலும்
இனிப் போனவுயிர் வருமா
தொலைந்த வாழ்வு திரும்புமா?
முள்முடி சூடி
முதுகிற் பாரச்சிலுவை சுமந்த
பாவப்பட்ட மக்களின் பயணப்பாடு முடிந்தது.
இயேசுவே!
எம்மையேன் இரட்சிக்க மறந்தீர் சுவாமி.
ஆலமுண்ட நீலகண்டனே!
எம்மைச் சாவு தின்றபோது தாங்காதிருந்ததுக்கு
அன்றுமட்டும் உமக்கென்ன அலுவலிருந்தது பிரபு.
அல்லாவே!
பிள்ளைகளைக் கைவிட்டதேனோ?
புத்தபெருமானே!
வெள்ளம் வருகுதென்றாயினும்
சொல்லவேண்டாமோ?
எல்லோரும் ஒதுங்கிக்கொண்டீர்கள்
நாங்கள்தான் தனித்துப்போனோம்.
வேண்டாம் இனியுமுங்கள் விளையாட்டு.
துயராற்றி நாங்களே நிமிர்ந்தாலன்றி
சோகம் தீராது.
இது பூப்பறிக்கும் தேசமாயின்
பலகாலம் அழுதபடி கிடந்தாலும் பழுதில்லை.
போரிடும் தேசமல்லவா எம்பூமி.
நிச்சயம் நிமிர்ந்தாகவேண்டும்
இல்லையேல் நிர்மூலமாகி விடுவோம்.
சேத நிலவரத்தை பார்வையிடுவதுபோல
தேச நிலைமைகளையும் கணக்கிட்டுப்போகலாம்.
நாடிபிடித்தறிய நல்லவேளை எனக் கணித்து
கூடிக்குலவ வரலாம்.
குண்டெங்கே வைக்கலாமென அறிய
தொண்டரென்று துரோகிகளும் வரலாம்.
நாங்கள் நிமிர்ந்தாக வேண்டும்.
ஆழத்துயரெனினும் அதைப்புதைத்து
மீளவேண்டும் விரைவில்.
தொடரும் சோகங்களை கற்களாக்கி
ஏணிப்படியொன்று இணக்குவோம்.
வேரறுந்தாலும் முளைகொள்ளும்
அறுகம்புல்லின் ஜாதி நாம்.
மேலே பொசுங்கினும்
கீழே வேர் கொள்வோம்.
இத்தனை வேகத்தில் சோகம் மீளுவோமென்பது
கோபத்தைக்கூடத் தரலாம்.
எம் பிள்ளைகளின் வாழ்வுக்காக
இனியும் இருக்கிறதல்லவா மீதிப்பயணம்?
எனவே சோகத்தைத் தொலைப்போம்
யாகத்தீ வளர்ப்போம்.

வியாசன்



# நெருப்பு நினைவுகளுடன்...

"அம்மா இனி இருக்கேலாது, நான் இயக்கத்திற்குப் போகப்போறன்" என்று மகன் சொன்னபோது அம்மா அதிர்ச்சியடையவில்லை. அவன் இப்படித்தான் அடிக்கடி விளையாட்டாகச் சொல்லுவான். பின் அம்மாவையே கட்டிப்பிடித்துக் கொண்டு சிரிப்பான். அம்மாவிற்கு பிள்ளை தன்னைவிட்டுப் போய்விடான் என்ற நம்பிக்கை. சிரித்தாள். பாவம் - அன்று அவன் முகத்தில் சிரிப்பில்லாது இறுக்கம் இருந்தது. உண்மையாகவே பேசினான்.

"இயக்கத்திற்குப் போனால் திரும்பி வரமாட்டன்" "ரங்கண்ணையைப் போல கரும்புலியாகத்தான் போவன்" இதைக்கேட்டதும் பெற்றவள் உள்ளம் பதறிப்போனாள். என்னென்றுதான் தாங்குவாள் தன் ஆசைமகனின் பிரிவை. நெஞ்சிற்குள் வெடித்த கலவரம் கண்களையும் கலங்கச்செய்ய அவள் எதையும் புரியாதவளைப்போல பாவனை செய்து பேசாதிருந்துவிட்டாள். அவனுக்கும் அம்மாவை விட்டுப் பிரிய விருப்பமில்லைத்தான். ஆனாலும் ஊரில் தினமும் நடக்கின்ற அவலங்கள் ஒவ்வொன்றும்தான் அவனின் நெஞ்சை மெல்ல மெல்லக் கலக்கின.

*அந்த ஜீவன்களின் உயிர் வாழ்வதற்கான துடிப்பும்... அதில் இருந்து தப்புவதற்குத் தவித்த தவிப்பும்... மெல்ல மெல்ல உடல் கருக உயிர் பிரிந்ததும் எல்லோரையும் கோபப்படவைத்தது. ஆனால் எதுவும் செய்ய இயலாதவர்களாய் நின்றார்கள்.*

**- துளசிச்செல்வன் -**

பள்ளிக்கூடம் செல்கின்ற வேளைகளிலோ வயலிற்குள் வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுதுகளிலோ ஊரில் விளையாடிக்கொண்டிருக்கும் நேரங்களிலோ கேட்கின்ற அவலமான வெடியோசை அடுத்தகணம் நடுங்கிக்கொண்டு ஓடும் ஊர். உயிர்காக்க ஓடுபவர்களையே வழிமறித்து வெறித்தனம் புரியும் இராணுவங்கள், எல்லாம் சின்ன வயதினிலே இருந்து அவனின் மனதில் பதிந்த விடயங்கள்.

கிராமம் அமைதியாகத்தான் இருந்தும் அடிக்கடி சோகங்களும் அவலங்களும் ஆங்காங்கே தலையெடுக்கும். ஊருக்குள் நுழைகின்ற வாசலில் இருக்கும் பாலத்தடியில் வைத்து கிளைமோர் தாக்குதல்கள் ஏதாவது இயக்கம் செய்துவிட்டுச் சென்றால். அந்த இழப்பின் ஆத்திரத்தில் கிராமங்கள் மீது சிப்பாய்கள் குதிப்பார்கள். யாரும் எதுவும் பேசமுடியாது. கைகட்டி நடுங்கியபடி நிற்பார்கள். ஆத்திர வெறியோடு ஊருக்குள் நுழைகின்ற இராணுவம் சில உயிர்களை சுலபமாய் பறித்துச் செல்லும். ஊரே ஒப்பாரி வைக்கும், சோகத்தில் மூழ்கும். பின் வழமைக்குவர மறுபடி அவலம் வரும்.

அன்று பகல் பொழுது மயங்கிவிடும் ஒரு வேளை ஊரெங்கும் பரபரப்பு, பதட்டம். எல்லோரையும் கைதுசெய்து பாலத்தடிக்கு இழுத்து வந்தார்கள். திருதிருவென விழித்த விழிகளில் மருட்சியுடன் வந்தவர்களிற்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. ஏற்கனவே பிடிக்கப்பட்டு கைகள் கட்டப்பட்ட இருவர் ஊர் மக்கள் முன்னிலையில் உயிரோடு ரயர் போட்டு எரிக்கப்பட்டார்கள்.

அந்த ஜீவன்களின் உயிர் வாழ்வதற்கான துடிப்பும்... அதில் இருந்து தப்புவதற்கு தவித்த தவிப்பும்... மெல்ல மெல்ல உடல் கருக உயிர் பிரிந்ததும் எல்லாரையும் கோபப்பட வைத்தது. ஆனால் எதுவும் செய்ய இயலாதவர்களாய் நின்றார்கள். அப்ப இவன் சின்னப் பொடியன்.

சிப்பாய் ஒருவன் வெறி நிறைந்த பார்வையோடு, "இப்படித்தான் ஒங்களிற்கும்" என்றுவிட்டு சிரித்தான். அட்டகாசமாகச் சிரித்தான். இந்த வரிகள்தான் அவன் இதயத்திலும் வானத்திலும் பட்டு மீண்டும் மீண்டும் எதிரொலித்தன. எங்களை நாங்களே பாதுகாக்க வேண்டும் என்ற முடிவுக்கு அந்தப் பிஞ்சுமனம் வருகின்றது. அதனால்தான் அவன் தன் பாசங்களை பிரிந்து மனதைக் கல்லாக்கி கசிகின்ற நினைவுகளோடு புலிகளின் பாசறைக்குள் புகுந்தான்.

குமழவன்... 1980.09.12இல் சிவப்பிரகாசம் கமலா தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாக பழுகாமத்தில் பிறந்தவன். ஒரு அண்ணனும் ஒரு தம்பியும் இரண்டு தங்கைகளும் அவனது உடன் பிறந்த உறவுகள். அழகான குடும்பம், வறுமையென்று சொல்வதற்கில்லை. நாட்டின் சூழ்நிலை அவனை போராடத் தூண்டியது.

*"இயக்கத்திற்குப் போனால் திரும்பி வரமாட்டன்" "ரங்கண்ணையைப்போல கரும்புலியாகத்தான் போவன்" இதைக் கேட்டதும் பெற்றவள் உள்ளம் பதறிப்போனாள். என்னென்றுதான் தாங்குவாள் தன் ஆசை மகனின் பிரிவை. நெஞ்சிற்குள் வெடித்த கலவரம் கண்களையும் கலங்கச்செய்ய அவள் எதையும் புரியாதவளைப்போல பாவனைசெய்து பேசாதிருந்துவிட்டாள்.*


மட்டக்களப்பு காட்டு பயிற்சிப் பாசறை ஒன்றில் தன் பயிற்சிகளை முடித்த அவன், அடுத்தடுத்து மட்டக்களப்பில் நிகழ்ந்த மூன்று முகாம் தாக்கியழிப்புக்களில் கலந்துகொண்டான். வன்னி நோக்கி தாக்குதல் அணிகள் புறப்பட்டபோது இவனும் அணிகளோடு சேர்ந்து வன்னி வந்தான்.

களங்களில் ஓயாமல் உழைத்துக்கொண்டிருந்த அவனது கால்கள் வலித்தாலும் அதைவிட சின்ன வயதிலே அவனது மனதில் பதிந்துபோன ஆக்கிரமிப்பாளர்கள் ஏற்படுத்திய காயங்கள் அதிகமாக வலித்தன.

வயல் வேலை செய்துகுடும்பம் நடத்திக்கொண்டிருந்த சித்தப்பா வயலுக்குள்ளேயே செல்லடிக்கு இறந்து போனமை, வீட்டில் விசேட கொண்டாட்டம் என்றால் ஊரிற்கு வெளியே இராணுவமுகாம் தாண்டிச் சென்று சந்தையில் பொருட்கள் வேண்டி வரவேண்டும். அண்ணன்தான் உடுப்புகளும் பொருட்களும் வேண்டுவதற்குப் போவான். இந்த நேரங்கள் எல்லாம் பிடித்து விசாரிப்பதும் அடிப்பதுமாக இராணுவம் தந்த வேதனைகள். எந்த நேரமும் நிம்மதி இழந்த பதட்டமும் இருக்கின்ற ஊர், இந்த நினைவுகளே அவனுக்கு பாரமாய் கனத்தன. அதுவே ரணமாய் வலித்தது, அவன் நெஞ்சில் அணையாது தீயாய் எரிந்தது.

வன்னிக்கு வந்ததும் அவன் எண்ணத்தில் இருந்தவற்றை தலைவருக்கு எழுதினான். பதிலுக்காகக் காத்திருக்கும் நாட்களில் ஜெயசிக்குறு நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் அணிகளோடு சேர்ந்து சமரிட்டான். எல்.எம்.ஜீ கனரக ஆயுதம்தான் இவனது ஆயுதம். அந்த ஆயுதத்தோடுதான் ஜெயசிக்குறு எதிர்ச்சமர் நடவடிக்கைகளில் அதிகமாய் ஈடுபட்டிருக்கிறான்.

ஜெயசிக்குறு எதிர்ச்சமர் களத்தில் ஒருநாள் எதிரியின் பெரிய முன்னேற்ற நடவடிக்கை ஒன்றை முறியடிப்பதற்காய் ஒவ்வொரு போராளிகளும் கடுமையாக சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். சண்டையின் ஒரு கட்டத்தில் குமழவன் நிலை எடுத்திருந்த புற்றிற்கு அருகாக எறிகணைகள் அடுத்தடுத்து வீழ்ந்தன. பெரிய மரக்கொப்புகளும் மண்ணும் அவனை முழுமையாக மூடியிருந்தாலும் சில கணநேரம் இயங்க முடியாதுபோன அவனும் அவனது ஆயுதமும் மறுபடியும் இயங்கத் தொடங்கின. அந்த இறுக்கம் நிறைந்த களச்சூழலில் அவனின் தளராது உழைப்பும் அன்றைய வெற்றிக்கு வழியமைப்பதாகவே இருந்தது.



**கரும்புலி மேஜர் குமழவன்**
(சிவப்பிரகாசம் லூகாகரன்)
மட்டக்களப்பு

| | | |
|---|---|---|
| தாயின் மடியில் | :- | 1980-09-12 |
| தாயக மண்ணில் | :- | 2000-05-22 |

ஜெயசிக்குறு களமுனையிலேயே கள அறிக்கையாளனாக அவனது பணி மாற்றப்பட்டது. அந்தப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில்தான் அவன் இத்தனை நாள் காத்திருந்த கரும்புலி அணிகளுடன் இணைவதற்கான அனுமதி கிடைத்தது.

சின்ன வயதில் இருந்தே நெஞ்சிற்குள் ஆழப்பதிந்துபோன சோகங்களிற்கும் அவலங்களிற்கும் முடிவு காணுவதற்காய் அயராது உழைத்தவன் 20.05.2000 அன்று ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையின் தொடர் வெற்றிக்காய் கோப்பாய் மண்ணிலே வீரகாவியமானான்.

"இயக்கத்திற்குப் போனா திரும்பி வரமாட்டன். ரங்கண்ணா மாதிரி கரும்புலியாத்தான் வெடிப்பன்". சிறுவயதில் அவன் உரைத்த வரிகள் இப்போதும் எதிரொலித்துக்கொண்டே இருக்கிறது.





www.eelamview.com

# மிஞ்சியவர் சொல்கின்ற 'கடலோடு காதை'கள்

யாரும் நம்பமுடியாத காலமொன்று வந்திருக்கிறது. அது உலகையே உலுக்கியுமிருக்கிறது. கொடுஞ்சுழி திரண்டுவந்து ஆசியாவின் கரைகளில் கூத்தாடியுள்ளது. நம்பிய கடல் நாசமாய் வந்து எல்லாவற்றையும் தின்றிருக்கிறது.

ஊருக்குள் கடல் வருமா? வீடுகளுக்குள் அது நுழையுமா? என்றெல்லாம் யாரும் ஒருபோதும் கடலைச் சந்தேகித்ததில்லை. எல்லோரும் கடலை நம்பியிருந்தோம். அதன் கரைநீளம் வேர்பாய்ச்சி வாழ்ந்திருந்தோம்.

ஒரு காலையில், ஒரு ஞாயிற்றில் வஞ்சம் கொண்டதுவாய், கோபமுற்றதுவாய் சீற்றத்தோடெழுந்த கொடுஞ்சுழி பெருந்துயரை எங்கும் விரித்தது.

சாவும் அழிவும் கரைநீளம் படலமாயிற்று.

கடல் எழுந்துவரக் கண்டவர்கள் ஓடினார்கள். ஓடியவர்களைக் கடல் துரத்தியது. வெறிகொண்டு கலைத்தது. உயிரோடு கொடுஞ்சுழி அடித்துச் சென்றது. சிலர் திகைத்து நின்றார்கள். நின்றவர்களைப் பேரலைகள் தூக்கி எறிந்தன.

வீடுகள் தரைமட்டமாகின. மரங்கள் சரிந்தன. படகுகள் கரையேறி, வானுயர்ந்து அங்குமிங்கும் மோதிச் சிதைந்தன. பள்ளிகள் இடிந்து வீழ்ந்தன. கோவில்கள் நொருங்கின. தேவாலயங்கள் பலிபீடத்தோடு பாறிவீழ்ந்தன.

கடல் ஊழிக்கூத்தாடியது. வாழ்வைத் தந்த கடல் வடுவள்ளி வீசியது. நெய்தல் நில மக்கள் நெஞ்சடைத்துப் போனார்கள்.

அலைதிரண்டு படையெனப் பாய்ந்து வருகையில் இந்த அப்பாவிகள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவர்கள் அறிந்த கடல் தாயாக இருந்தது. கரைநீளம் அலைக்கரங்களால் கால் தடவியது. மடிநிறைய அள்ளித் தந்தது அது. அவர்களருகில் அழகாயிருந்தது கடல். யாரும் அதைக்கண்டு அஞ்சவில்லை. அலையெறிந்து அலையெறிந்து அழகாகவேயிருந்தது அது. அதனால் அதனோடு அவர்கள் அருகாயிருந்தார்கள்.

தாயின் மீது எவருக்குச் சந்தேகம் வரும்? தாய்க்குப் பசியெடுத்ததா? வெறிபிடித்ததா? ஏனிந்தக் கோபம் வந்தது? அவர்களுக்குப் புரியவில்லை புரியவேயில்லை.

கொடுஞ்சுழி எல்லாவற்றையும் வெறியோடு புரட்டியெறிந்தது.

பிள்ளைகளை இழந்தனர் தாய்மார். மனைவியை இழந்தனர் கணவன்மார். எல்லோரையும் இழந்து தவித்தன பிள்ளைகள். சொந்தங்கள் எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு மரமொன்றைக் கட்டிப்பிடித்துக் கதறிக்கொண்டிருந்தாள் முல்லைத்தீவில் ஒரு குடும்பப்பெண். பயணத்துக்காக ஏறியிருந்த பஸ்ஸிலிருந்து கடல் வருகுதென்று பயத்தால் குதித்தோடிய குடும்பமொன்று அப்படியே அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. ஒரேயொருவர் மட்டும் தப்பியுள்ளார். அவர் பஸ்ஸிலிருந்து ஏனோ இறங்காமல் இருந்தபடியால் தப்பியதாக நினைவெடுத்துச் சொல்கிறார்.



அலைகள் திரண்டுவந்து அடித்த அடியில், அவற்றின் வேகத்தில் எல்லாமே தூக்கியெறியப்பட்டன. எதிர்பாராத நிகழ்ச்சி அது. கற்பனையே செய்திராத அலைக்கூத்து. யாரையும் யாரும் காப்பாற்ற முடியாதென்ற நிலையின் அந்தரிப்பு.

கடற்கரையோரத்தில் கூடியிருந்த வீடுகளுள்ள இடங்கள் முற்றாக அழிந்துவிட்டன. அம்பாறையில், கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது, மருதமுனை, மட்டக்களப்பில் நாவலடி,



கல்லாறு, காத்தான்குடி, வாகரை என்று ஏராளம் கிராமங்கள் இருந்தும் இல்லாமற் போயுள்ளன. முல்லைத்தீவில், வடமராட்சி கிழக்கில், வடமராட்சியில் என்று கடலோரமெங்கும் ஒரே சிதைவுகளும் அழிவுகளும் சாவுகளும்தான். எங்கும் கடலின் சீற்றம். கொடுத்த வாழ்வைக் கெடுத்த மாதிரி வாழ்வள்ளியெறிந்த கொடுமை.

மின்னல் தாக்கியதுபோல, கணநேர வேகத்தில், சுதாகரித்துக் கொள்ளமுன் அலைகள் அடாத்தாடின.

பிள்ளைகள் தண்ணீரால் அறுத்துச் செல்லப்பட்டு முக்குளிக்கும்போது பெற்றதாய் கண்ணால் பார்த்திருக்கிறாள். ஆனால் காப்பாற்றமுடியாத நிலை. அவளால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. அவளும் உயிருக்காகப் போராடி ஏதோ ஒரு மரக்கொப்பில் பிடிப்பதைத்தவிர பிள்ளையைத் தூக்க முடியவில்லை. கடல் ஒரு கொடும் விதியாக அவள் முன் நின்றாடியது. எதுவுமே செய்யமுடியாத சிறு தூசாகினாள் அவள்.

'தண்ணீருக்குள் மூழ்கியவாறு ஏறக்குறைய மயங்கும் நிலையில் ஒரு பெண் தத்தளிக்கிறாள். அவளுடைய கண்கள் 'தன்னைக் காப்பாற்றுங்கள்' என்று கெஞ்சுகின்றன. ஆனால், என்னால் அந்தப் பெண்ணைக் காப்பாற்ற முடியாமற் போய்விட்டது' என்கிறார் அலைகளால் அடித்தெறியப்பட்டு காயங்களோடு உயிர்தப்பிய ஒருவர்.

'இன்றும் கெஞ்சிக்கொண்டிருந்த அந்தக் கண்கள் என் நினைவில் தெரிந்துகொண்டேயிருக்கின்றன. அதை மறக்கமுடியவில்லை' என்கிறார் அவர்.

வழிபாட்டுக்காக கூடியிருந்தவர்களை அப்படியே அலைகள் வந்து அமத்திவிட்டன. ஒருவர்கூட மிஞ்சமுடியாத அளவுக்கு கட்டடமே இடிந்துவிட்டது ஓரிடத்தில்.

இன்னோரிடத்தில் தளிர்களாகக் கூடியிருந்த சிறுவர்கள் அனைவரையும் அலைகள் பசியாறின. அத்தனை மழலைகளின் குரல்களையும் காற்றிலிருந்தே பறித்தன அலைகள். பறித்து விழுங்கின அவை.

தன்னுடைய பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என நாற்பத்தியாறு பேரை பலிகொடுத்துவிட்டு தனிமரமாக நிற்கிறார் வடமராட்சி கிழக்கில் ஒரு முதிய பெண். அழுவதைத் தவிர வேறுவழியில்லை என்றமாதிரி ஒரு வாழ்க்கையை அந்தக் கணங்கள் உருவாக்கிவிட்டன. ஆனால், அழுதுகொண்டேயிருக்க முடியாது என்பது வேறு.

எங்கும் சாவோலங்கள். பிள்ளைகள், குழந்தைகள்தான் அதிகமாக இறந்தவர்கள். கொடுஞ்சுழிக்குத் தாக்குப்பிடிக்க முடியாது உடனே இறந்தவர்கள் அதிகம் அவர்கள்தான்.

ஆழக்கடலோடிய அனுபவமுடையவர்களால்கூட பெருகிவந்த பேரலைக்குத் தாக்குப்பிடிக்க முடியாமற் போய்விட்டது.

***முதல்நாள் நத்தார் கொண்டாட்டங்கள் இரவிரவாக நடந்தது. இரவு பாலன் பிறந்தார். அலைகள் அதைப் பாடின. எல்லோரும் விழித்திருந்தார்கள். அலைகளுக்கு அந்தத் தோத்திரங்கள் கேட்டிருக்கும். விடியவும் பாலனையும் அடித்துச் சென்றது கொடுஞ்சுழி. யாராலும் யாரையும் காப்பாற்ற முடியவில்லை. வெள்ளமாய் பெருகிநின்றது துயரம். சாவுகள் எண்ணப்பட்டுக்கொண்டேயிருந்தன.***

கடலம்மா, ஏனெங்களை இப்படிவந்து அள்ளுகிறாய் என்று கேட்கவே முடியாத கணத்தில், நினைவேயெழ முடியாத விதமாய் கடல் கொண்டது கரைகளை; கரையின் உயிர்களை; நெய்தலின் ஆன்மாவை.

வாழ்வில் இப்படியும் ஒரு நிலையோ என்றுகூட அப்போது யோசிக்கமுடியவில்லை என்றார் அலைகள் அடித்துக் காயப்படுத்தி, உயிருக்குப் போராடி மீண்ட ஒருவர்.

கொத்துக் கொத்தாக குடும்பம் குடும்பமாக கடல் கொண்டுபோன உயிர்கள் கொஞ்சமல்ல. கரையேறிவந்து எல்லாரின் சுவடுகளையும் அழித்துவிட்டு மீண்ட கடல், தான் வந்துபோன அடையாளமாய் விட்ட சுவடுகள் கற்குவியல்கள், இறந்தவர்களின் ஆயிரக்கணக்கான சடலங்கள், கண்ணீரோடும் கதறலோடும் விம்முகின்ற உறவுகள், ஆதரவற்ற குழந்தைகளைத்தான்.

தன் மடியிற் பிறந்தவர்களைத் தானே எடுத்துக்கொள்ளுகிறேன் என்ற உரிமையில்தான் கடல் அப்படிச் செய்ததா?

புயலை தன்மடியிற் சுமந்தவள் கடலன்னை. பெரு மழையையும் வெள்ளத்தையும் தன் வயிற்றில் ஏந்தியவள் அவள். கோடையிலும் வாடையிலும் தன் பிள்ளைகளை வாழவைத்தவள் அவள்.

கடலோடக் கடலோட தன்னை விரித்து தன்னை விரித்துத் தந்தவள் அவள். பாதையாக நின்றவள். வாழ்வாக மலர்ந்தவள். பயணத்தில் தோழியாக நின்றவள். அவள் அழகி. கரைநீளம் அலைமுகம்கொண்டு சிரித்தவள். நீலப்பெண். பேரியற்கையாய் பரந்தவள். மூத்தவள். ஆதியானவள்.

***- கருணாகரன் -***

தன்னைப்பற்றி மனதில் எழுதப்பட்டிருந்த அத்தனை படிமங்களையும் அவளுடைய கொடுஞ்சுழிகள் அடித்து நொருக்கிவிட்டனவா?

இனிக் கடலுக்கு அஞ்சும் காலம்தான் என்றவள் உணர்த்தினாளா?

அப்படியல்ல. அப்படியே அல்ல. அவள் என்ன செய்வாள்? அவள் நல்லவள்.

நிலம் பிளந்து அவள் நிம்மதியைக் குலைத்தது. நிம்மதி கெட்டவள், அமைதி குலைந்தவளின் சீற்றம் எங்கள் வாழ்வின் வயிற்றைக் கலக்கியது. அவளுடைய குமுறல்கள் எங்களில் மோதியிருக்கின்றன. அவை எங்களை வீழ்த்தியிருக்கின்றன.

கடலம்மா! நீ கேள். கல்முனையில் நீ விளையாடிய வினையில் வேலியினுள் சிக்கி நாலுபிள்ளைகள் விழி பிதுங்கிக் கிடந்தார்கள். அந்தச்சாவின் அவலம் கண்டு கதறுகிறார்கள் இரண்டு தாய்மார். பிள்ளைகள் எல்லோரையும் பறிகொடுத்துவிட்டு மணலில் கைபரப்பி அடித்துக் கதறுகிறார்கள் நிந்தவூரில் இரண்டு பெற்றோர்கள்.


பிள்ளைகளையும் தன் துணையையும் தொலைய விட்டு தனித்த பறவையாக விம்முகிறார்

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்குதவுவது என்பது வெறுமனே இரக்கம், கருணை கலந்த செயற்பாடாக மட்டும் இருக்கமுடியாது. அதாவது சுனாமிக்கு முன்னிருந்த வாழ் நிலைக்கு அவர்களை இட்டுச் செல்வதாகவிருக்க முடியாது. அல்லது போர் தொடங்கிய 1970களில் இருந்த நிலைக்கு மல்ல. எல்லாருக்கும் கிடைத்த வாய்ப்பைப்போலவே அவர் களுக்கும் தொடர்ந்து கிடைத் திருந்தால் இன்று என்ன நிலைக்கு வந்திருப்பார்களோ அந்த நிலையை கருத்தில்கொண்டே உதவித்திட்டங்கள் வரையப்பட வேண்டும். இதுவரை எம் மக்களுக்கு மறுக்கப்பட்ட வாழ்நிலை தொடர்ந்தும் மறுக் கப்படுவதை உறுதிப்படுத்துவ தாக சுனாமியின் விளைவால் வரும் உதவிகள் உறுதிப் படுத்துவதாக அமையு மானால் அது முறையற்றது. எது கிடைத்தாலும் சரியென இரந்து வாழ எம்மக்கள் ஆயத்த மாயில்லை.

சிறிலங்காவின் இரண் டகமும் ஏரவஞ்சனையும் உல கறிந்தது. அதன் நிருவாக இயந்திரத்தின் மெத்தனமும் ஒழுங்கீனமும் ஊழலும் உலகப் புகழ் பெற்றது. சிறிலங்கா அரசு ஒரு "தோற்றுப்போய்விட்ட அர சாங்கம்" (ஜயதேவ உயங்கொட) என்றே இப்போது கருதப்படு கின்றது. எனவே கிடைக்கப் போகும் வெளிநாட்டுதவிகளை முறையாகப் பங்கிட, தேவை களை இனம்காண, அதற்கான திட்டங்களை தயாரிக்க, அதனை நடை முறையளவிட தனியான, சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டமைப்பிற்குள் அகப்படாத திறன்வாய்ந்த கட்டமைப்பே அவசியம் என்பதே புலிகள் நிலைப்பாடு. இக் கருத்து இன்று இவ்வுலகின் கவனத்தினை ஈர்த் துள்ளது. மோதல்கள் நிரம்பிய நாடுகளில் மத்திய அரசுகள் மாற்றாந்தாய் போக்கிற்கு மாற் றாக இதனை ஒரு முன்மாதிரித் திட்டமாக பயன்படுத்த முடியுமா என உலகவங்கி போன்றவை ஆராய்வதாக தெரிவிக்கப்படு கின்றது.




**கிடைக்கப்போகும் வெளிநாட்டுதவிகளை முறையாகப் பங்கிட, தேவைகளை இனம்காண, அதற்கான திட்டங்களைத் தயாரிக்க, அதனை நடைமுறையளவிட தனியான, சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டமைப்பிற்குள் அகப்படாத திறன்வாய்ந்த கட்டமைப்பே அவசியம் என்பதே புலிகள் நிலைப்பாடு. இக்கருத்து இன்று இவ்வுலகின் கவனத்தினை ஈர்த்துள்ளது. மோதல்கள் நிரம்பிய நாடுகளில் மத்திய அரசுகள் மாற்றாந்தாய் போக்கிற்கு மாற்றாக இதனை ஒரு முன்மாதிரித் திட்டமாக பயன்படுத்த முடியுமா என உலகவங்கி போன்றவை ஆராய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இவையே விடுதலைப் புலிகளின் புத்தாக்கத் திட்டமான போதும் இரண்டு அடிப்படை களை எப்போதும் புலிகள் இறுகப்பற்றி நிற்பர். ஒன்று, இத்தகைய பேரிடர்களுக்கு உடனடி முகம் கொடுக்கும் இவ்விடை நிலையேற்பாடுகள் விடுதலைப் போராட்டத்தின் செல்நெறியில் பாதிப்பினை ஏற்படுத்தாது பாதுகாத்துக் கொள்ளல். உதாரணம் இடைக் கால நிருவாகசபை யோச னைக்கு இவ்வேற்பாடு மாற்றாக அமையாது என்பதே புலிகளின் நிலை. இரண்டாவதும், மிக முக்கியமானதுமான சுனாமியால் பெரும் பாதிப்புற்ற - பேராசிரியர் மௌனகுரு கூறிய கருத்தினை பிரதிபலிப்பது "இதற்கு முன்ன மும் கடல் கோள்கள் வந்தன. சூறாவளியும் வீசியது. அப்போ தெல்லாம் யாரும் நிவாரணம் பற்றி அலட்டிக்கொள்ளவில்லை... அழிவை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற எண்ணம் எல்லா ருள்ளும் உள்ளது. இதை வளர்க்கும் முயற்சியில் சகலரும் ஈடுபட வேண்டும். எவரையும் தங்கியிருப்பவர்களாக மாற்ற முயலாமல் ஒவ்வொருவரையும் அவர்கள் சொந்தக்காலில் நிற்கவைக்க வேண்டும்."

தேசியத் தலைவர் அண்மையில் பின்வருமாறு கூறி னார். "எம் மக்களை எவரில் தங்கியும் பிறரை எதிர் பார்த் தும் நிற்கும் மனநிலைக்கு நாம் இட்டுச் செல்லாமல் அவர் கள் தங்களில் தாங்களே தங்கி நிற்கவைக்கவே நாம் முயல வேண்டும்" ●

## அம்மாவின் சுவடுகளில்

அடர்ந்த காட்டின் நடுவில் களநிலைப் போராளிகளுக்கான அந்த சமையற்கூடம் அமைந்திருந்தது. அங்கு வரிசையாக வைக் கப்பட்டிருந்த எறிகணை வெற்றுக் கோது களில் பூச்செடிகள் பூத்துச் சிரித்தன. வட்டக் கொட்டிலினுள் எறிகணை வெற்றுப் பெட்டி களினால் நேர்த்தியாக இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன.

அங்கு அவனும் ஊரவர்களும் இரவு பகலாக உழைத்துக்கொண்டிருந்தார்கள். இரவில் சிலமணி நேரமே தூங்கமுடிந்தது.

அவன் அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு மாவீரர்களுக்கு மலர் வணக்கம் செய்துவிட்டு, அன்றைய செயற் பாட்டைத் தொடங்குவான்.

ஊரவர்கள் குழுக்குழுவாக வெவ்வேறு உணவாக்க வேலைகளில் ஈடுபட்டார்கள். அவன் ஒவ்வொரு இடமாக மேற்பார்வை செய்துகொண்டிருந்தான். தேவையான இடங்களில் ஊரவர்களுடன் சேர்ந்து தானும் உணவாக்க வேலைகளில் ஈடுபடுவான். உணவு வகைகளை சுவை பார்த்து உறுதிப்படுத்து வான்.



களநிலைகளிலிருந்து தொலைத் தொடர்பு சாதனத்தினூடாக வரும் அறிவுறுத் தல்களையும் உள்வாங்கி உணவு அளவுகளில் மாற்றங்களைச் செய்வான். ஒருவேளைக்கான உணவு சமைத்து முடியும் நிலையில், உணவின் அளவு அதிகரிப்பு பற்றிய அறிவிப்பும் சில வேளைகளில் வரும். அவற்றையும் வேகமாக செய்துமுடிப்பார்கள்.

எதிரியின் போர்விமானங்கள் இவர் களின் இடத்தைத்தேடி காடெங்கும் குண்டு களை வீசும். சிலவேளைகளில் தாக்குதலுக்கு இலக்காகி இழப்புக்களும் ஏற்பட்டிருக்கின் றன. உடனடியாக சமையற்கூடத்தை இடம் மாற்றி எஞ்சிய உணவுப் பொருட்களையும் பாத்திரங்களையும் பயன்படுத்தி உணவாக்கி களநிலைகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

உணவாக்கத்தில் அவனும் ஊரவர் களும் எப்போதும் விழிப்பாகவே இருப்பார் கள். உணவில் ஏற்படும் விளைவு களநிலைகளி லும் மாற்றத்தை ஏற்படுத்திவிடுமென்பதை அவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். பல நாட்க ளாக வீடுகளுக்குச் செல்லாமல் ஊரவர்கள் உணவாக்கத்தில் ஈடுபட்டு போராளிகளுக்கு உயிர்ச்சத்தை ஊட்டிக்கொண்டிருந்தார்கள். உணவு வழங்கலில் பொறுப்பாக ஈடுபட்ட போராளி எதிரியின் எறிகணையில் அகப்பட்டு விழுப்புண்ணடைந்த தால் அவனே உணவு வழங்கலிலும் பொறுப் பாக ஈடுபடவேண்டியிருந்தது.

பகலுணவு சமைத்து முடிந்திருந்தது. வேகமாக ஊர்தியில் ஏற்றினார்கள். ஊரவர் களில் ஒருவன் ஊர்தியைச் செலுத்த இன் னொருவன் உணவுப்பொதிகளிருந்த இடத் திற்கருகில் இருந்து அவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் துப்பாக்கியை தயார் நிலையில் வைத்திருந்தபடி காட்டு வீதியின் இருபக்கமும் கவனித்துக் கொண்டி ருந்தான்.

ஊர்தி சீரற்ற காட்டுவீதியில் விழுந் தெழும்பி விரைந்துகொண்டிருந்தது. உண வுப் பொதிகள் களநிலைகளிலிருந்து குறிப் பிட்ட தூரத்தில் இறக்கப்பட்டன. உரிய நேரத்தில் உணவு வழங்கிய திருப்தியோடு சமையற் கூடத்திற்கு திரும்பிக் கொண்டிருந் தார்கள். பாதிவழியில் ஊர்தியை நிறுத்தி விட்டு எடுத்துவைத்த உணவுப் பொதியை பிரித்து சாப்பிட்டுவிட்டு, உணவின் நிலையை உறுதிப்படுத்திவிட்டு மீண்டும் விரைந்தார்கள்.

உணவு வழங்கலின்போது கிளை மோரில் சிக்கி வீரச்சாவடைந்த நண்பனதும் ஊரவர்களதும் சம்பவ இடம் கடந்து ஊர்தி விரைந்தது. அடுத்தவேளை உணவுக்கான தயார்படுத்தல்கள் அவர்களின் மனங்களில் விரிந்தன. ●

பதிரப்படாத பக்கங்கள்

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் அம்மையார் தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்துவிட்டு சிங்களவரின் தலைவியாகவே நடந்துகொண்டார்.

கடற்கோள் அழிவை ஒரு தேசியப் பேரழிவு என அறிவித்து - உலக உதவி கோரிய அதேசமயம் நாட்டில் அவசரகால நிலையைப் பிறப்பித்து வடக்கு, கிழக்கில் தனது இராணுவ நலன்களை உறுதி செய்வதில் அம்மையார் அக்கறை காட்டினாரேயொழிய, வடக்கு, கிழக்கு மக்களின் மீட்பு மற்றும் நிவாரண விடயங்களில் அக்கறை காட்டவில்லை.

இலங்கைத்தீவில் அதிகம் பாதிப்படைந்த வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திற்கு உலகத் தலைவர்கள் வந்துவிடாதபடி பார்த்துக்கொள்வதில் சந்திரிகா அரசு, ஒரு கேவலமான இனவெறியுடன் நடந்துகொண்டது. 'தனது மக்கள்' என்று வடக்கு கிழக்கு மக்களை உலக நாடுகளுக்குச் சொல்லிவந்த அம்மையார் இந்த அவலநேரத்திலும் இனவெறி உணர்வுடன் செயற்படுவது கண்டு உலகத் தலைவர்கள் திகைத்துப் போயினர்.

ஒரு பேரழிவில் இலங்கை மக்கள் அல்லல்பட்ட வேளையில் அந்த மக்களுக்கு உதவுவதை விட்டுவிட்டு, பெருமெடுப்பில் ஆயுதக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களை வரைவதிலேயே அம்மையாரின் அரசு குறியாக இருந்தது.

ஈரானுடன் ஒரு ஆயுத ஒப்பந்தம். உலகநாடுகளுடன் யுத்த டாங்கிகள் வாங்கும் உடன்படிக்கை. பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்... என்று சிங்கள அரசு போர் முனைப்புடனேயே செயலாற்றி வருகின்றது.

வந்து குவியும் வெளிநாடுகளின் மனிதாபிமான உதவிக்கான பணத்தை சிங்கள அரசு ஆயுதக்கொள்வனவுகளுக்கு பயன்படுத்த முனைகின்றது என்ற அச்சம் தமிழ்மக்களிடம் எழுந்துள்ளது.

சந்திரிகா அம்மையாரின் சமாதான விரோதச் செயற்பாட்டால் முன்னர் வரவிருந்த 'டோக்கியோ நிதி' அரசிற்குக் கிடைக்கவில்லை. அதனால் இலங்கையின் அரச பொருளாதாரம் பாரிய நெருக்கடி நிலையில் இருந்தது. ஆனால் இப்போது திடீரென சிங்கள அரசு ஆயுதக்கொள்வனவில் - கப்பல் கொள்வனவில் - விமானக் கொள்வனவுகளில் அக்கறைகாட்டுகின்றது. இதற்கான நிதிவளம் சிங்கள அரசுக்கு எவ்வாறு கிடைத்துள்ளது என்பது உலகறிந்த விடயமாகும்.

இந்தவகையில், இயற்கை அழிவுகளைக்கண்டு உலகம் வழங்கிய உதவிகளை சிங்கள அரசு ஆயுதக் கொள்வனவிற்கும் - தென் பகுதி அபிவிருத்திக்குமே செலவிட்டு வருகின்றது என்ற உண்மை வெளியாகின்றது.

தமிழர் பகுதிகளுக்கான வெளிநாட்டு உதவிகளின் பங்கு சரியாகக் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும், கிடைக்கும் நிதி உரிய இடங்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற கொள்கையுட னும் சிங்கள அரசும் - புலிகள் இயக்கமும் இணைந்த ஒரு பொதுக்கட்டமைப்பு அமைய வேண்டும் என்று புலிகள் இயக்கம் அரசைக் கோரியிருந்தது.

ஆனால், பொதுக் கட்டமைப்பு யோசனையை சிங்கள அரசு புறக்கணித்து வருகின்றது. அதற்குப் பதிலாக ஊழலும் - இனவெறி உணர்வும் - நிர்வாகத்திறன் அற்றதுமான சிங்கள நிர்வாக இயந்திரத்தினூடாகவே வடக்கு - கிழக்கு பகுதிகளிலும் வெளிநாட்டு உதவிகள் செலவிடப்படும் என்று அரசு பிடிவாதம் பிடிக்கின்றது.

இந்த இயற்கை அழிவுகளைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளை வேகப்படுத்தவேண்டும் என்ற உலகநாடுகளின் விருப்பத்திற்கு முற்றிலும் மாறாக ஒரு போரைத் தூண்டக்கூடிய நடவடிக்கைகளிலேயே சந்திரிகா அரசு ஈடுபடுகின்றது.

சுனாமி அழிவுகள் குறித்த மனிதாபிமான வேலைத்திட்டங்கள் தொடர்பாக தலைமைப்பீடத்துடன் ஆலோசனை கலந்துவிட்டு மட்டக்களப்பு திரும்பிய புலிகளின் அணி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்து - தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.


இத்தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் கொல்லப்பட்டனர். இது மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டிச் செயல் என்பதுடன், புலிகள் இயக்கத்தைச் சீண்டி போருக்கிழுக்கும் ஒரு இராணுவச் செயலுமாகும்.

இவ்விதம், சமாதான முயற்சிகளுக்குப் பதிலாக சந்திரிகா அரசு போர்முனைப்பிலேயே காலத்தை ஓட்டுகின்றது. அதற்கு வாய்ப்பாக சுனாமி அழிவுக்கான வெளிநாட்டு உதவிகளை இராணுவத் தேவைக்கு திசைதிருப்ப முயற்சிக்கின்றது. அதேசமயம், புனர்வாழ்வு மற்றும் நிவாரண விடயங்களிலும் தமிழர்களைப் புறக்கணித்து - வஞ்சிக்க சிங்கள அரசு முனைகின்றது.


சிங்கள அரசின் இந்த இனவாத - இராணுவவாத செயற்பாட்டை சர்வதேச சமூகம் உணர்ந்துகொண்டு - அதற்கேற்ற விதமாகச் செயற்படவேண்டும் என்பதே தமிழரின் அவாவாகும்.



லெப்.கேணல் கௌசல்யன்



மேஜர் செந்தமிழன்



மேஜர் புகழன்



2ம் லெப் விதிமாறன்

ஓர் பாரிய இயற்கை அனர்த்தம் நடந்த இந்த நேரத்தில் - அந்த அனர்த்தத்திற்குள் சிக்கிய மக்களுக்கு மனிதாபிமானப் பணிகள் புரிவதில் பெருமுயற்சிகள் செய்துகொண்டிருந்த போராளிகள் மீதான தாக்குதல் சமாதான முயற்சிகளுக்கும் சாவு மணி அடிப்பதாக உள்ளன.

**(01ஆம் பக்கத் தொடர்ச்சி)**

படையினரின் வழமையான சோதனைகளுக்குப் பின்னர் பிரயாணத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களது வாகனம் மட்டக்களப்பை அடையமுன்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வழிமறிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்து உயிர்தப்பியுள்ள போராளியொருவர் இராணுவத்தினரே கொலையாளிகள் என்பதை உறுதிப்படுத்தி - சாட்சியம் வழங்கியுள்ளார். கௌசல்யன் குழுவினரின் பயணம் இராணுவத்திற்கு மட்டுமே தெரிந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கோழைத்தனம் கொண்டதும் - துரோகத்தனம் மிக்கதுமான இந்தப் படுகொலையைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இவ்விதமாக போராளிகளைப் படுகொலை செய்தும், படுகொலை நடவடிக்கைகளுக்கு துணைபோயும் வரும் இராணுவத்தின் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னரும் பலதடவைகள் நடந்துள்ளன.

போர்நிறுத்த விதிகளை மீறியும் - சமாதானச்சூழலை குழப்பியடிக்கும் நோக்கிலும் இத்தகைய கொலைத்தாக்குதல்களை சிங்களப் படைகள் நடாத்திவருகின்றன.

போர்நிறுத்த விதிகளை அனுசரிப்பதிலும்சரி, இயற்கை அனர்த்த உதவிகளை வழங்குவதிலும் சரி, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதிலும்சரி சிங்கள அரசு தொடர்ந்தும் இனவாதப் போக்கையும் - இராணுவத் திமிரையும் காட்டிவரும்போது புலிகள் இயக்கம் தொடர்ந்தும் பொறுமை காப்பதும் - அனுசரித்துப் போவதும் சாத்தியமற்றதொன்றாகிவிடும்.

**(13ஆம் பக்கத் தொடர்ச்சி)**

நாவலடியில் ஒருவர். நாவலடி என்ற
ஓரிடமே இல்லை என்ற மாதிரி,
கடலழித்து நிற்கிறது அங்கே. அங்கிருந்த
ஒருவட்ட உறவுகள் அத்தனையையும்
கடல் தின்றுவிட்டது.
மிஞ்சியவர்கள் சொல்கின்ற
கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு
காவியம். அவை ஒவ்வொன்றும்
ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'கடலாடு
காதை'கள்.
முதல்நாள் நத்தார்க்
கொண்டாட்டங்கள் இரவிரவாக நடந்தது.
இரவு பாலன் பிறந்தார். அலைகள்
அதைப்பாடின. எல்லோரும்
விழித்திருந்தார்கள். அலைகளுக்கு
அந்தத் தோத்திரங்கள் கேட்டிருக்கும்.
விடியவும், பாலனையும்
அடித்துச்சென்றது கொடுஞ்சுழி. யாராலும்
யாரையும் காப்பாற்ற முடியவில்லை
வெள்ளமாய் பெருகிநின்றது
துயரம். சாவுகள் எண்ணப்பட்டுக்
கொண்டேயிருந்தன.
தலைமுறைகள் அறியாத
கொடுமையான அனுபவத்தை நாங்கள்
அறியும்படியானோம். பேரழிவுகளைத்
தெரிந்தவர் நாம். அகதி வாழ்க்கை
நமக்குப் புதிதல்லத்தான்.
ஆனால், அலை கொண்டுவந்த
பேரழிவு மிகப்பெரிது. அது
கொடுமையிலும் கொடுமை.
அலைகளால் வெற்றிபெற்றவர்
நாங்கள். ஓயாத அலைகளால்
வாழ்வை கண்டெடுத்தவர் நாங்கள்.
அலை முதுகேறிப் படகோட்டிப்
பயணம்போய் திரவியம் தேடி
வந்தவரால் வென்றவர் நாம்.
அலையாடும் கடலோடிப் பகை மோதி
வெடித்து வெற்றிபெற்றவர் நாம்.
கொடுஞ்சுழியாய் வந்த அலைகடலில்
என்றால் வென்றிருப்போம் என்கிறான்
ஒரு வீரன்.
கடல் கரையேறி வந்தது
அபத்தம். அது கட்டுக்கடங்காத திமிர்.
அதன் திமிரை தென்தமிழீழத்தில்
பார்ப்பதே ஆகக் கொடுமையாகவுள்ளது.
சில கிராமங்கள் முற்றாக
இல்லை. கடலை அறிந்தவர்களில்
பாதிக்கு மேலானவர்களைக் கடல்
அள்ளியே விட்டது. இனி கடலை
அறியவேண்டும். புதிதாய் வாழக் கடலை
நெருங்கவேண்டும்.
வழியற்ற விதியா விதியற்ற
வழியா இனியென்று கொடுஞ்சுழி தந்தது
என்று எங்கும் மிஞ்சிய உறவுகள்
சொல்லிமுடியாத வேதனைக்
கதைகளோடு அகதிமுகாம்களில்
இருக்கிறார்கள்.
வாழ்வை அள்ளிக்
குடித்துவிட்டு நெய்தலின் மனிதர்களை
அகதி முகாம்களில் தள்ளிவிட்டது
கொடுஞ்சுழி.
அகதி முகாம்களில் துயரோடும்
வேதனையோடும் கூடியிருக்கிற
சனங்களை முட்களின்மேல் படுங்கள்
என்ற மாதிரிச் சூழ்ந்திருக்கின்றன
அதிரடிப்படைகள்.
பனையால் வீழ்ந்தவனை
மாடேறி மிதித்த கதைபோல அலையால்
அடித்து அகதியாக்கப்பட்டவர்களை
அதிரடிப்படை வளைத்து நிற்கிறது.
பாதிக்கப்பட்ட மக்களின் மனதை
ஆற்றுப்படுத்த வேண்டியதற்குப் பதிலாக
ஆறாத காயத்தின்மேல் புதுக்காயம்
என்பதாக படையினரின் நடவடிக்கைகள்
தொடர்கின்றன.
கண்ணீரும் கவலையுமாக
இருக்கின்ற மக்களின் கவலைகளைத்
துடைத்து அவர்களை
ஆற்றுப்படுத்தவேண்டிய காரியங்கள்
ஆயிரம் உண்டு. அதற்கு அரவணைக்கக்
காத்திருக்கும் கைகளை நீளவிடாமல்
தடுக்கப் பார்க்கிறது படை.
உலகம் எல்லாம் இருந்து
உதவிகள் வந்து குவிகின்றது. ஏன்?
துயரத்தைப்பகிரும் பேரார்வத்தோடும்
அவலத்தைத் தீர்க்கின்ற பெரும்
கரிசனையோடுமல்லவா. இழப்புகளைச்
சுமந்த மக்கள் பேசட்டும், அவர்களின்
சொந்தக் கதைகளை. அது அவர்களுக்கு
ஒரு விதத்தில் ஆறுதலாக இருக்கும்
மனச்சுமை குறைவதற்கு ஏதுவாகும்.
அவர்கள் தங்களின் உணர்வுகளைச்
சொல்வதற்கும் விருப்பங்களை
வெளிப்படுத்து வதற்கும்
அதைவிட வேறு வழியென்ன.
தங்களுக்குத் தேவை யானவற்றை
கேட்பதற்கு அவர்களுக்கு உதவும்
உறவுகளோடு இணைவதற்கு, கூடி
ஆறுதல் பெறுவதற்கு ஏன் இடையில்
தடைகள் வேண்டிக்கிடக்கிறது.
கொடுஞ்சுழியின் அழிவுத்துயரங்கள்
வரலாற்றின் வழி நெடுகவும் பெருகிக்
கிடக்கத்தான் வேண்டுமா?
அலையெறிந்த மனிதர்களை
அரவணைத்து அவர்கள்
சொல்லத்துடிக்கின்ற வார்த்தைகளைச்
செவிமடுக்க வழிவேணும்.
கொடுஞ்சுழி வந்தடித்தது. ஒரு
நிகழ்வுதான் ஆனால் அது ஆயிரமாயிரம்
கதைகளை, பேசித்தீராத
ஆச்சரியங்களை உருவாக்கிவிட்டுப்
போய்விட்டது.
ஆழிக்கதைகள்
சொல்லிக்கொண்டேயிருப்பர் எங்கள்
மனிதர். மனதில் படிந்துவிட்ட
நினைவுகளில் இருந்து அந்தக்
கதையூற்று பெருகியபடியே இருக்கும்.
கடல் அமைதியாக இருக்கிறது
இப்போது. அது இப்படி எத்தனை
நிகழ்ச்சிகளைத் தன் வாழ்வில்
பார்த்திருக்கிறது.
அதற்கு எல்லாம் ஒன்றுதான்.
அது பேரியற்கை. நாளை
நாங்கள் படகேறும்போது மீண்டும்
அலைபாடி வரவேற்கும் மடிநிறைக்கும்.
வாழ்வள்ளித்தரும்.
கரைநீளம் குடி வந்தால்
மீண்டும் அலை முகங்காட்டி
வரவேற்கும். காற்றாக வருவோர்க்கு
கையசைத்து மகிழும்.
அவள் தாய். ஆதி.
எல்லாவற்றிற்கும் அப்பாலானவள்.

# ஆழிப் பேரழிவின் பதிவுகள்

ஊருக்குள் கடல்புகும்... அதுவும் ஆழிப் பேரலையாக நுழைந்து உயிர்க்கொலைகள் புரியும் என்று எவரும் கற்பனை செய்திருக்க வில்லை. ஐம்பெரும் பூதங்களென நிலத்தை - நீரை - நெருப்பை - காற்றை - ஆகாயத்தை எம் முன்னோர்கள் உருவகப்படுத்தியதை நேற்று வரை நாங்கள் பெரிதுபடுத்தவில்லை. பூதம் என்று நாம் இதுவரை கருதியது இனவாதப் பேயையும் அதன் ஏக புதல்வனாகிய இராணுவ பூதத்தையும்தான்.


ஆனால் தனது அழிவுச் சக்தியை இயற்கை எம்மீது காட்டிவிட்டதே! 1500கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் நிலம் என்ற பூதம் நடுங்க - அங்கிருந்து நீர் என்ற பூதம் நெளிந்து - அசைந்து - கரையில் சிறகுமுளைத்து - வாய் பிளந்து - எம்மக்களை விழுங்கிவிட்டதே.

சிலநிமிட கடல் சீற்றம் தமிழீழத்தின் இருபதினாயிரம் வரையான மக்களை அழித்து விட்டது. எத்தனையோ குடும்பங்கள் முற்றாக அழிந்துவிட்டன. தாய் - தந்தையை இழந்த பிஞ்சுகள் ஏராளம். இன்னும் பல ஆண்டு களுக்கு நிலைத்து நீடிக்கப்போகும் அந்தச் சோக நினைவுகளைச் சுமந்துநிற்கும் சில விபரங்களை இங்கே காணலாம்.

## இறப்புக்கள்

வடக்கு-கிழக்கு 17,024


தெற்கு-மேற்கு 10,403




## காயங்கள்

வடக்கு-கிழக்கு 7,198


தெற்கு-மேற்கு 7,794




## இடம்பெயர்ந்தவர்கள்

வடக்கு-கிழக்கு 344,803


தெற்கு-மேற்கு 219,662




## சேதமான பாடசாலைகள்

வடக்கு-கிழக்கு 128


தெற்கு-மேற்கு 48





## சேதமான வீடுகள்

வடக்கு-கிழக்கு 85279

தெற்கு-மேற்கு 35,757




| | யாழ் மாவட்டம் | முல்லைத்தீவு மாவட்டம் | கிளிநொச்சி மாவட்டம் | திருமலை மாவட்டம் | மட்டக்களப்பு மாவட்டம் | அம்பாறை மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| இறப்புக்கள் | 1256 | 2771 | 30 | 1076 | 2840 | 9051 |
| காயங்கள் | 1647 | 2590 | 670 | – | 1575 | 6771 |
| இடம்பெயர்ந்தவர்கள் | 41013 | 21178 | 1603 | 69212 | 61912 | 137960 |
| சேதமான பாடசாலைகள் | 11 | 12 | – | 23 | 36 | 40 |
| சேதமான வீடுகள் | 7198 | 4000 | 7500 | 16378 | 21126 | 29077 |
| சேதமான வைத்தியசாலைகள் | 03 | 02 | 01 | 09 | 08 | 29 |

**சுருக்கக் குறியீடுகள்**

- இறப்புக்கள்
- காயங்கள்
- இடம்பெயர்ந்தவர்கள்
- சேதமான பாடசாலைகள்
- சேதமான வீடுகள்
- சேதமான வைத்தியசாலைகள்



www.eelamview.com